வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 10.06.2022 வெள்ளிக்கிழமை இதழ் : 192 பக்கங்கள் : 16




# இலங்கைக்கு உடன் 47 மில். டொலர் தேவை; உதவும் நாடுகளிடம் ஐ. நா.கோரிக்கை

நியூயோர்க், ஜூன் 10

**இலங்கைக்கு 47 மில்லியன் டொலர்கள் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 1,700 கோடி ரூபாய் உயிர்காக்கும் உதவி தேவை என ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.**

**பொருளாதார நெருக்கடியில் தவிக்கும் இலங்கைக்கு கூட்டு மனிதாபிமான முன்னுரிமை திட்டம் ஒன்றை ஐ. நாவும் அரச சார்பற்ற அமைப்புகளும் நேற்று வெளியிட்டன.**

அந்த அறிக்கையில், “ஜூன் மாதம் முதல் செப்ரெம்பர் வரையில் பொருளாதார நெருக்கடியால் மோசமாக பாதிக்கப்படப்போகின்ற 17 இலட்சம் மக்களுக்கு உயிர்காக்கும் உதவிகளை வழங்குவதற்கு 47.2 மில்லியன் டொலர்கள் தேவை.

தற்போதைய நெருக்கடி காரணமாக எழுந்துள்ள அவசர தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஐக்கிய நாடுகளின் உதவியுடனான பல்துறை சர்வதேச உதவி தேவை என இலங்கை அரசாங்கம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே ஐ. நா. இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இலங்கையில் உள்ள மனி

15



# 21 ஐ எதிர்க்கிறேன்!

## பஸில் பகிரங்க அறிவிப்பு

கொழும்பு, ஜூன். 10

“அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை நான் எதிர்க்கின்றேன். இது எனது தனிப்பட்ட கருத்து.” - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு கூறினார்.

“21 ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பில் பிரதமருடன் பேச்சு நடத்தினோம். அதில் உள்ள சரத்துகளுக்கு பொறுப்புக்கூற

15



# தொடருந்துடன் கார் மோதல் யாழ்ப்பாணத்தில் இருவர் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 10

புகையிரதக் கடவையில் சமிக்ஞை ஒலி - ஒளி அமைப்பு மின்சாரம் இன்மையால் செயலிழந்ததால் வீதியை கடக்க முயன்ற காரை ரயில் மோதியதில் இருவர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு யாழ்ப்பாணம் - அரியாலையில் இடம்பெற்றுள்ளது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த தொடருந்து மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

வழமையாக இந்தக் கடவையில் வீதி தடை இல்லாத போதிலும் சமிஞ்ஞை ஒளி ஒலி பயன்படுத்தியே வீதி தடை ஏற்படுத்தப்படுவது வழமை. இந்நிலையில், நேற்றிரவு அந்தப் பகுதியில் மின்சாரம் தடைப்பட்டிருந்த நேரத்திலேயே இந்த விபத்து

15

# மது விருந்தில் கைகலப்பு; ஒருவர் பலி; நால்வர் காயம்!

## மல்லாவியில் நேற்று சம்பவம்

முல்லைத்தீவு, ஜூன் 10

நேற்று முன்தினம் இரவு நடந்த மதுபான விருந்தில் ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். அத்துடன், நான்கு பேர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு - மல்லாவி - திருநகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில், இதே இடத்தைச சேர்ந்த கமலநாதன் தஜீவன் (வயது-31) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த அதே இடத்தை சேர்ந்த மேலும் நால்வர் மல்லாவி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது மருத்

15

# பதவியை துறந்தார் பஸில்; மேலும் 10 பேர் விலகுவர்?

கொழும்பு, ஜூன் 10

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிறுவுநரும் முன்னாள் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ நேற்றைய தினம் பாராளுமன்ற உறுப்புரிமையை துறந்தார்.

தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்புரிமையை பெற்ற அவர், தன்னைக் குறிவைத்து, இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் பாராளுமன்ற உறுப்புரிமை பெறுவதை தடை

15

# ‘கப்புடா’ சர்ச்சை காரணமாக ஆங்கிலத்தை தவிர்த்த பஸில்!

கொழும்பு, ஜூன் 10

நேற்றைய தினம் பஸில் ராஜபக்ஷ நடத்திய ஊடக சந்திப்பில் ஆங்கிலத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த பஸில் ராஜபக்ஷ, ஏற்கனவே, ‘கப்புடா’ சர்ச்சையில் சிக்கியுள்ளேன். தெரிந்த மொழியிலேயே கதைக்கின்றேன்”, என்று கூறி ஆங்கிலத்தில் பேச மறுத்தார்.

முன்னர், சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு பேட்டியளித்திருந்த பஸில் ராஜபக்ஷ காகத்துக்கு ஆங்கில வார்த்தையான க்ரோ (crow) என்ற வார்த்தையை பயன்படுத்தாமல் அதன் சிங்கள சொல்லான கப்புடா என்று விளித்தார். இந்த விடயம்

15

# முகக் கவசம் அணிவது இன்றுமுதல் அவசியமல்ல!

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

நாட்டில் உட்புற மற்றும் வெளிப்புற இடங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயம் இல்லை என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று விசேட சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி, முகக் கவசம் அணிவது கட்டாயம் இல்லை என்று நடைமுறை இன்று வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வருகிறது. எனினும், முகக்கவசம் அணிய விரும்புபவர்கள் எந்த தடையும் இன்றி அதனை அணிந்து கொள்ள முடியும். எனினும், சுவாசக் கோளாறுகளால் பாதிக்கப்

15

# பதவி விலகுவேன் - மிரட்டிய ரணில்! தாராளமாக விலகலாம் என்ற கோட்டா!

கொழும்பு, ஜூன் 10

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு யாரை நியமிப்பது என்பதிலேயே இந்த முரண்பாடு ஏற்பட்டதாகவும் இதையடுத்து ரணில்தான் பிரதமர் பதவியிலிருந்து விலகுவேன் என்று மிரட்டினார் என்றும் அதற்கு ஜனாதிபதி, அவரைத் தாராளமாக பதவி விலகலாம் எனக் கூறினார் என்றும் சிங்கள இணையம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டின் பிரபல தொழிலதிபரான தம்மிக பெரேரா

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

லண்டனிலிருந்து அண்மையில் "ஈழநாடு"வுக்கு ஒரு மின்அஞ்சல் வந்திருந்தது.

இரண்டு எழுத்துகளில் பெயர் கொண்ட ஒரு பெண் அனுப்பியிருந்தார். "கடந்த முப்பதாம் திகதி உங்கள் பத்திரிகையில் வெளிந்த போலியான- மோசடியான விளம்பரம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லையெனில் தங்கள் மீது சட்ட நட வடிக்கை எடுக்கப்படும்" என்று அவர் எச்சரித்திருந்தார்.

அன்றைய பத்திரிகையில் இரண்டு மரண அறிவித்தல்கள் மட்டும்தான் வெளிவந்திருந்தன. அவற்றில் ஒன்றில், மரணமானவரின் மருமகளின் பெயரும் இந்த மின் அஞ்சல் அனுப்பியவரின் பெயரும் ஒன்றாக இருந்தன.

ஒரு மரண அறிவித்தல் போலியான- மோசடியான விளம்பரமாக இருக்காதே என்ற சந்தேகம் "ஈழநாடு"வுக்கு.

அந்தப் பெண் தொலைபேசியில் தொடர்புகொண்டார். அப்படி என்னதான் அந்த விளம்பரத்தில் தவறு இருக்கின்றது என்று கேட்டதற்கு, அவர் சொன்னார், "என்னுடைய காணியை அங்குள்ள ஒருவர் விற்பதாக விளம்பரம் போட்டிருக்கிறார்" என்றார். அப்படியொரு விளம்பரம் "ஈழநாடு"வில் வெளிவர வில்லை என்பதைச் சொன்னபோது -

"இல்லையில்லை, யாழ்ப்பாணத்திலிருந்து எனது நண்பர் ஒருவர் "ஈழநாடு"வில் வந்ததாகக்கூறி அனுப்பிய விளம்பரத்தின் படத்தை அனுப்புகிறேன் பாருங்கள்" என்று கூறிவிட்டு தொடர்பை துண்டித்தார்.

அவரிடமிருந்து வந்த விளம்பரம், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் இன்னுமொரு பத்திரிகையில் வெளிவந்தது. ஆனால், அதை அவருக்கு அனுப்பிவைத்த நண்பரோ ஈழநாடு வில் வந்ததாக அனுப்பியிருக்கின்றார்.

இது நடந்து சில நாட்கள்தான் இருக்கும், நேற்று லண்டனிலிருந்து நண்பர் ஒருவர் தொடர்புகொண்டார்.

எடுத்த எடுப்பிலேயே, "தந்தை செல்வாவுக்கு அமிர்தலிங்கம் அரசியல் வாரிசு மாதிரி, சம்பந்தனுக்கு சுமந்திரன் வாரிசு என்ற தொனிப்பட சித்தர் சொன்னார் எண்டு எழுதியிருக்கிறீரே!" என்று பாய்ந்தார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. "என்னடாப்பா சொல்லுறாய், ஒண்டும் விளங்கவில்லையே!" என்றேன்.

"கூட்டமைப்பு எம்.பி.க்கள் குழு கூட்டத்திலை சம்பந்தர் பேசினது ஒண்டும் விளங்கயில்லை எண்டும், அப்ப சித்தர் - முன்னைய காலத்தில் தந்தை செல்வாவுக்கு அமிர் செய்யிற மாதிரி, ஐயா இப்ப என்ன சொல்கிறார் எண்டதை கேட்டுச் சொல்லும் படி சுமந்திரனிட்டை சொன்னதாகவும், அதனால - கூட்டமைப் பின் அடுத்த தலைவர் சுமந்திரனே எண்டு சித்தரே ஏற்றுக்கொண்டு விட்ட மாதிரியும் எழுதியிருந்தீரே- அதைத்தான் கேட்டனான்" என்றார்.

இப்படி எதுவும் இந்த ஊர்க்குருவி எழுதவில்லை. கூட்ட மைப்பு கூட்டங்கள் என்றால் அங்கு நடந்த விசயங்கள் எல்லாவற்றையும் தனது அழகான பொருள் கோடலோடு எழுதுகிறவர் நமது நண்பர் "மின்னல்" எண்டது எனக்கு தெரியும்தானே.

அதனால், லண்டன் நண்பரிடம் கேட்டேன், "நீர் எந்தப் பேப்பரிலை படிச்சிட்டு இப்ப எந்தப் பேப்பர் பற்றி கதைக்கிறீர் எண்டது தெரியுதோ?" என்று.

அப்போதுதான், அவருக்கு புரிந்தது - இரண்டுபேர் எழுதுறதையும் படிச்சிட்டு ஒருத்தரோட கதைக்கிறதாக நினைச்சு மற்றவருக்கு அழைப்பு எடுத்திருக்கிறார் என்பது.

"அது சரியடாப்பா, அப்படி சித்தர் சொன்னதில பல அர்த்தங்கள் இருக்குமே அதுக்கு ஏன் இப்பிடி கோபப்படுகிறாய்" என்று கேட்டேன்.

"செல்வாவோட சம்பந்தனையும், அமிர்தரோட சுமந்திரனை யும் ஒப்பிட்டால்..... செல்வாவையும் அமிர்தரையும் இந்த அளவுக்கு சித்தரை விட யாருமே கேவலப்படுத்தியிருக்க முடியாது" என்றார் அவர்.

"அமிர்தரை புலிகள் சுட்டுக்கொன்றது, அவரை துரோகி எண்டுதானேடாப்பா. அதையும் ஏற்றுக்கொண்டு செய்தி போட்ட ஆட்கள்தான் நாங்கள். இப்ப சுமந்திரனை அமிர்தரோட ஒப் பிட்டு அந்த பட்டியலிலை சித்தர் சேர்ந்திருக்கிறாரோ என் னவோ தெரியேல்லையே" என்றேன் நான். நண்பர் தொடர்பை துண்டித்துக் கொண்டார். அடுத்ததாக அவர் மின்னலுக்கு கோல் எடுத்திருப்பாரோ என்னவோ?

நான் சித்தருக்கு அழைப்பை எடுத்தேன். 'அமிர்தரின் அர்ப்பணிப்பு, ஆளுமை, தமிழ் மக்களுக்காக அவர் செய்த தியாகங்கள் எல்லாத்தையும் நல்லா தெரிஞ்ச மனுசன் நீங்கள். நீங்களே அவரோட சுமந்திரனை ஒப்பிடலாமோ?" என்று கேட்டேன்.

அவர் தனக்கே உரிய பாணியில் ஏளனச் சிரிப்போடு சொன் னார் - "நான் அதை சொன்ன அர்த்தமே வேறு; மின்னலுக்கு அது சொல்லப்பட்டிருக்கிற அர்த்தமோ வேறு" முன்னைய காலம் உங்களுக்கு நினைவிருக்கும்தானே. தந்தை செல்வா, தான் சொல்ல நினைப்பதை சொல்லுவார். அது தெளிவில்லாமல் இருக்கும். அப்ப அமிர் அண்ணை, 'தந்தை என்ன சொல்ல வருகிறார் எண்டால்' என்று தொடங்கி, தன்ர கருத்தை அதுக் குள்ள சேர்த்து தந்தையின் கருத்து போல சொல்லிவிடுவார். அதுமாதிரியே, 'ஐயா என்ன சொல்ல வருகின்றார் என்று தொடங்கி உங்கட கருத்தை அதுக்குள்ள சொல்லிவிட போறீங் களோ என்றுதான் நான் சுமந்திரனிட்ட பகிடியாக கேட்டனான். ஆனால், அது ஏதோ சீரியஸான விசயம் போல மின்னலுக்கு சொல்லப்பட்டிருக்கு போல..." என்றார்.

லண்டன் நண்பரை மீண்டும் அழைத்து சித்தர் சொன்னதைச் சொன்னேன். அவர் சொன்னார் - "தந்தை செல்வா சொன்னதை விரிவாக விளக்கவே அமிர்தலிங்கம் தன்ர கருத்தை அன்று சேர்த்திருப்பார். ஆனால், சுமந்திரன் தன்ர கருத்தைச் சேர்ப்பது ஐயா சொல்வதை விரிவாக்க அல்ல என்பது சித்தருக்கு விளங்கினால் சரி" என்று.

**- ஊர்க்குருவி**



# கடத்தப்படவிருந்த ஆடுகள் தலைமன்னாரில் மீட்பு!

மன்னார், ஜுன் 10

தலைமன்னார் ஊர்மனை கடற்கரையின் பற்றைக்காட்டு பகுதியில் கால்கள் கட்டப்பட்ட நிலையில் உயர்ந்த ரக 5 ஆடுகள் தலைமன்னார் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் இரவு தலைமன்னார் கிராமம் கடற்கரை பகுதியில் உள்ள பற்றைக் காட்டில் உயர்ந்த ரக ஆடுகள் கால்கள் கட்டப்பட்ட நிலையில் கிடப்பதை அவதானித்த தலைமன்னார் கடற்படையினர் குறித்த ஆடுகளை மீட்டு தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்த ஆடுகள் இந்தியாவுக்கு கடத்தி செல்லப்படும் நோக்கில் கால்கள் கட்டப்பட்டு கிடந்ததன் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் தலைமன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது தலைமன்னார் கிராமத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது ஆடுகளை காணவில்லை என்றும் குறித்த ஆடுகள் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் இருப்பதை அறிந்து உரிமை கோரியுள்ளார்.

-இதனையடுத்து நேற்று மன்னார் நீதி மன்றில் குறித்த சம்பவத்தை தலைமன்னார் பொலிஸார் முற்படுத்தினர்.

இதன்போது உரிமையாளரின் ஆவணங்களை பரிசீலித்த நீதிவான் ஆவணங்களின் தெளிவில்லாத தன்மை குறித்து சரியான ஆவணங்களை நீதிமன்றுக்கு முற்படுத்துமாறும் அதுவரை ஆடுகள் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தின் கண்காணிப்பில் பராமரிப்பை மேற்கொள்ளுமாறும் நீதிவான் உத்தரவிட்டதை அடுத்து குறித்த ஆடுகள் தலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டு பராமரிக்கபடுகின்றன.

மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)



# வவுனியா பல்கலை வளாகம் அருகே நேற்று தீப் பரவல்!

வவுனியா, ஜுன் 10

வவுனியா பல்கலைக்கழக வளாகத்திற்கு அருகில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை காலை 11.30 மணியளவில் வவுனியா பல்கலைக்கழக வளாகம் அருகேயுள்ள காணியிலேயே இந்தத் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த இடத்துக்கு விரைந்து சென்ற நகர சபை தீயணைப்பு பிரிவினர் இரண்டு மணி நேரப் போராட்டத்தின் பின்னர் தீயை முற்றாக அணைத்தனர்.

இதன் மூலமாக தீ பல்கலைக் கழக வளாகத்தினுள் பரவும் பெரும் அனர்த்தம் தவிர்க்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை பூவரசங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இந்து கல்லூரிகளின் விவாத சமர் இன்று

யாழ்ப்பாணம், ஜுன் 10

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எதிர் கொழும்பு இந்துக் கல்லூரி அணிகள் மோதும் விவாதச் சமர், "சொல்லாடல் நிதர்சனத்தின் களம்" என்ற தொனிப் பொருளில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் இடம் பெறவுள்ளது.

"இன்றைய அரசியல் சூழலில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை ஏற்க தயாராக வேண்டும் ஃ இல்லை" என்ற தலைப்பில் இந்த விவாத சமர் இடம்பெறவுள்ளது. (ஐ)

# பி. சி. ஆர். சோதனை அவசியம் இல்லை!

கொழும்பு, ஜுன் 10

திரையிடல் சோதனையாக (Screening Test) இன்று முதல் பி. சி. ஆர். அல்லது ரெபிட் அன்ரிஜென் சோதனை மேற்கொள்வது அவசியம் இல்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விசேட சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய, இன்று முதல் அமுலாகும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# டெங்கு நோயாளர்கள் சடுதியாக அதிகரிப்பு

கொழும்பு, ஜுன் 10

கடந்த சில நாட்களாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் கடந்த 8 நாட்களில் மாத்திரம் 2,416 டெங்கு நோயாளர்கள் பதிவாகி ணயுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதில் 54வீதம் அல்லது அதிகமான நோயாளிகள் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளனர்.

இதன்படி கடந்த 8 நாட்களில் கொழும்பு மாவட்டத்தில் 728 நோயாளர்களும் கம்பஹா மாவட்டத்தில் 354 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர். களுத்துறை மாவட்டத்தில் இந்த மாதம் 233 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இவ்வருடம் இதுவரையில் 26,622 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். (ஐ)

# கீரிமலை கமநல சேவையில் நேற்று விவசாயிகள் குழப்பம்!

யாழ்ப்பாணம், ஜுன் 10

தெல்லிப்பழையில் அமைந்துள்ள கீரிமலை கமநல சேவை நிலையத்தின் முன் விவசாயிகள் நேற்று குழப்பத்தில் ஈடுபட்டனர்.

மண்ணெண்ணெய் வழங்குவதற்கான அட்டை விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பதாகை இடப்பட்டுள்ளதாலேயே இந்தக் குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு வந்த தெல்லிப்பழை பொலிஸார் அதிகாரிகள் மற்றும் விவசாயிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட பின் அமைதியின்மையில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.

இதன்போது கீரிமலை கமநல சேவை நிலைய



அபிவிருத்தி உத்தியோகத்தர் நா. சிவரூபன் விவசாயிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
10.06.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 27

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# சீனாவின் பாராட்டு?

பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் இலங்கைக்கு, 'முதலில் அயலவர்கள்' - என்னும் வெளிவிவகாரக் கொள்கையின் அடிப்படையில், இந்தியா தொடர்ந்தும் உதவி வருகின்றது. இந்தியாவின் உதவிகளால்தான் ஓரளவு இலங்கை மூச்சுவிட முடிகின்றது. இந்தப் பின்னணியில்தான், இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர், மிலிந்த மொறகொட, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைக்கு வரும் வரையில் இந்தியா உதவிகளை செய்ய வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தார். இந்தியாவும், மொறகொடவின் கோரிக்கைக்கு சாதகமாகவே பதிலளித்திருந்தது.

இந்த நிலையில், இந்தியாவின் நெருக்கடிகால உதவிகளைப் பாராட்டியிருக்கும் சீன வெளிவிகார அமைச்சு - இந்தியாவுடனும் சர்வதேச சமூகத்துடனும் இணைந்து, இலங்கைக்கு உதவி செய்வதற்கு சீனா தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றது.

இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும் அறிவிப்பை சீனா அண்மையில் வெளியிட்டிருந்தது. இவ்வாறானதொரு நிலையில்தான், சீன வெளிவிவகார அமைச்சு, இந்தியாவின் உதவிகளுக்கு பாராட்டுத் தெரிவித்திருக்கின்றது. சீனாவின் பிரசன்னம், இந்திய அரசியல் அவதானிகளால் எப்போதும் சந்தேகத்துடனேயே நோக்கப்படுகின்றது. குறிப்பாக, சீனாவின் வடக்கு நோக்கிய முதலீட்டு நகர்வுகள் இந்தியாவால் வரவேற்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளில், சீன நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டிருந்த, (மீளப்புதுப்பிக்கக் கூடிய) மின் உற்பத்தி திட்டமானது, பின்னர் கைவிடப்பட்டது. யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த சீனத் தூதுவர் தாம் அந்தத் திட்டத்தை கைவிடவில்லையென்றும், அது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருந்தார். ஆனால், அதன் பின்னர் இன்றுவரையில் அந்தத் திட்டம் நடைமுறைக்கு வரவில்லை. தென்னிந்தியாவுக்கு மிகவும் அருகில், சீனாவின் திட்டங்கள் வருவது தொடர்பில் புதுடில்லி அதிக கரிசனை கொண்டிருக்கின்றது. இந்தியாவின் கரிசனைகள் அதன் பாதுகாப்புடன் தொடர்புடையவை. ஒரு பிராந்திய சக்திக்கு அருகிலிருக்கும் சிறிய நாடுகள், இவ்வாறான அழுத்தங்களை ஒருபோதுமே, தவிர்க்க முடியாது.

இலங்கைக்கு, இந்த விடயத்தில் ஏற்கனவே போதிய அனுபவங்கள் இருக்கின்றன. ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான அரசாங்கம், இந்தியாவின் கரிசனைகளை புறம்தள்ளி செயல்பட்டமையின் விளைவாகத்தான், இந்தியாவின் நேரடியான தலையீட்டை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. அதுவே, இந்திய - இலங்கை ஒப்பந்தமாகப் பரிணமித்தது. எனவே, தனது உடனடி அயல் நாட்டுக்குள் இடம்பெறும் அனைத்து விடயங்களையும் இந்தியா அதன், பாதுகாப்பு மற்றும் நீண்டகால நலன்களிலிருந்தே நிறுத்துப் பார்க்கும். இதனை ஒருபோதுமே இலங்கை தவிர்க்கவோ, தாண்டிச் செல்லவோ முடியாது. அப்படித் தாண்டிச் செல்ல முற்பட்டால், இந்தியாவின் கோபத்துக்கு ஆளாக நேரிடும்.

இந்த விடயங்களை விளங்காமல் சீனாவும் செயல்படவில்லை. எம்மத்தியிலுள்ள தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளும், சில புத்திஜீவிகளும் கருதுவதுபோல், சீனா கண்ணை மூடிக்கொண்டு இலங்கைக்குள் வரவில்லை. இந்தியாவின் ஆற்றல் எத்தகையது, தங்களின் எல்லைக்கோட்டை எதுவரை நீட்டலாமென்னும் புரிதலோடுதான், சீனாவும் செயல்பட்டு வருகின்றது.

அண்மையில், சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - சீனா, அதன் முதன்மையான ஈடுபாட்டை, கிழக்காசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளை நோக்கி நகர்த்தியிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், இந்தியாவின் உதவிளை இலங்கை அதிகம் எதிர்பார்க்கின்றது. இந்தியாவுக்கு அதன் நலன்களை பாதுகாப்பது எப்படியென்று தெரியும். சீனாவுக்கு அவர்களுடைய எல்லைக்கோடும் இலக்குகளும் தெரியும். ஆனால், தமிழர்களுக்கு தாங்கள் எங்கே போய்க் கொண்டிருக்கின்றோம் என்பது தெரியுமா? இது தொடர்பில்தான் தமிழர்கள் சிந்திக்க வேண்டும்.

# மறைமுகமாக நடந்தேறி கொண்டிருக்கும் ஓர் அரசியல் புரட்சி!



- அனந்த பாலகிட்ணர் -

இலங்கையில் தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசு தொடர்ந்து ஆட்டங்கண்டு வருவதை அவரின் மற்றுமொரு சகோதரரான முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்துள்ளமை மேலும் எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது.

பிரதமராக இருந்தவரும் இரு தடவைகள் ஜனாதிபதியாக இருந்தவருமான மகிந்த ராஜபக்ஷ ஒரு மாதத்துக்கு முன்னர் ஆக்ரோஷமான மக்கள் ஆர்ப்பாட்டம் காரணமாக அலரி மாளிகையிலிருந்தே தப்பிச்சென்று திருகோணமலையில் பதுங்கி இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் முன்னாள் அமைச்சரும் காலிமுகத்திடல் கோட்டா கோ கம ஆர்ப்பாட்டத்தை குழப்புவதற்கு முன்னின்றவருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைது செய்வதற்கு பிடியாணை பிறப்பித்துள்ளது.

இதுதவிர, ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான மிலான் ஜயதிலக உட்பட பன்னிரெண்டு பேர் மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற குழப்பகரமான நிலைமை தொடர்பாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினரான சனத் நிஷாந்த என்பவரும் மொறட்டுவை நகர முதல்வரான சமன்லால் பெர்னாண்டோ உட்பட வேறு சிலரை இம்மாதம் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எனவே, மக்களால் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும், மேயர்களாகவும் தெரிவானவர்கள் தற்போது விளக்கமறியல் கைதிகளாகவும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களாகவும் இருப்பது நாட்டின் ஆட்சிப்பீடத்தில் எவ்வளவு தூரம் சட்டம் ஒழுங்குக்கு புறம்பானவர்கள் இருக்கிறார்கள் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

இன்றைய அரச தரப்பு உறுப்பினர்களின் நேர்த்தியற்ற தன்மை காரணமாக அமைச்சு செயலாளர்களாகவும் வேறு முக்கிய பொறுப்புகளிலிருந்த அதிகாரிகள் சிலர் கூட தமது பதவிகளிலிருந்து விலகியுள்ளனர்.

அத்துடன், கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் காரணமாக, பல பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள், ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்களால் எரிக்கப்பட்டுமிருந்தன.

இத்தகைய பின்னணியில் சாதாரண அமைச்சராக இல்லாமல் நிதி அமைச்சராக முக்கிய பொறுப்பு வகித்த பஸில் ராஜபக்ஷ தற்சமயம் தமது பாராளுமன்ற பதவியையும் துறந்துள்ளமையை நோக்கும்போது காலிமுகத்திடல் கோட்டா கோ கமவுக்கு எதிரான வன்முறை வெடித்து ஒரு மாதம் பூர்த்தியான தருணத்திலேயே பஸில் ராஜபக்ஷ தற்போது தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்துள்ளார்.

பிரதமராக மகிந்த ராஜபக்ஷவும் நிதி அமைச்சராக பஸில் ராஜபக்ஷவும் இருந்த போது அவர்களை மலேசியாவின் வெற்றிகரமான தலைவரான மஹதிர் மொஹமட், சிங்கப்பூரின் வெற்றிகரமான பிரதமராக இருந்த லீ குவான் யூ ஆகியோரோடு ஒப்பிட்டு ஆளுங்கட்சி அமைச்சரான அலி சப்ரி கருத்து வெளியிட்டிருந்தார்.

ஆனால், பொருளாதார சிக்கல்களால் துவண்டு போயிருந்த மலேசியா, சிங்கப்பூர், என்பவற்றை தற்போது தென்கிழக்காசியாவில் பிரமிக்கத்தக்க பொருளாதார வல்லமை கொண்ட நாடுகளாக மாற்றியமைப்பதில் மலேசியாவின் மஹதிர் மொஹமட், சிங்கப்பூரின் லீ குவான் யூ ஆகியோர் சுயநலமற்ற முறையில் நேர்மையாளரார்களாக தத்தமது நாடுகளின் நலன்களில் கரிசனை காட்டியதன் காரணமாகவே இன்று மலேசியாவும் சிங்கப்பூரும் சர்வதேச அரங்கில் தலை நிமிர்ந்து நிற்கின்றன.

ஆனால், இலங்கையில் கையிருப்பிலிருந்த அமெரிக்க டொலர்களையே சுரண்டியதோடு நாட்டு நலன்களை விடுத்து தமது சொந்த நலன்களில் அரச தரப்பிலிருந்தோர் கரிசனை காண்பித்ததன் காரணமாகவே, இன்று இலங்கை பொருளாதார ரீதியாக அதல பாதாளத்தில் வீழ்ந்துள்ளது.

அண்மைக்காலம் வரை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க தற்போது பிரதமராக ஆளும் தரப்பில் இருக்கின்ற நிலையில் எதிர் வரும் வாரங்கள் மிகக்கடினமான காலங்களாக இருக்கப் போகின்றன என்று அவர் எச்சரித்துள்ளார். அத்துடன், இலங்கையின் பொருளாதாரத்தை தற்காலிகமாக தாக்குப் பிடிக்க ஆறு பில்லியன் டொலர்கள் தேவையெனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் நாடு மேலும் மோசமான நிலைக்கு தள்ளப்படும் என்ற செய்தியையே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தந்துள்ளார். அதேசமயம் பஸில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியுள்ளதோடு வேறு பல ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மோசமான கேடிகளைப் போல பொலிஸாரினால் தேடப்பட்டும் வருகின்றனர்.

இத்தகைய பின்னணியில் காலிமுகத்திடல் கோட்டா கோ கம ஆர்ப்பாட்டம் ஐம்பது நாட்களுக்கும் மேலாக நடந்து வருவதையும் நோக்கும்போது ஓர் அரசியல் புரட்சி வெளிப்படையாக இல்லாமல் மறைமுகமாக அதே சமயம் மெதுவாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றதோ எனக் கருத வேண்டியுள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
நிதானமாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். எதிர்பார்த்த தகவல் வரும்.மறைமுகத் தொல்லை விலகும். பண வரவால் குடும்ப நெருக்கடி அகலும். உற்சாகமாக செயல்படுவீர்.

**இடபம்**
யோசித்து செயல்படுங்கள். முயற்சியில் இழுபறி நிலை இருக்கும்.வீட்டில் பிரச்னை வந்து விலகும். அலுவலகத்தில் மற்றவர்கள் பாராட்டுவர்.பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி சிந்திப்பீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் பிரச்னை உருவாகும். உறவினர் விலகிச் செல்வர். நிதானம் தேவை.மனம் அலைபாயும். செயல்களில் கவனம் தேவை. நண்பரால் ஆதாயம் உண்டு. தொழிலில் லாபம் குறையும்.

**கடகம்**
எதிர்பார்த்த பணம் வரும். இன்று மேற்கொள்ளும் முயற்சி சாதகமாக அமையும்.செல்வாக்கு உயரும். தந்தை வழி உறவினர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.பொன் பொருள் சேரும்.

**சிம்மம்**
கவனக் குறைவால் இழப்புகளை சந்திப்பீர்கள். நிதானமாக செயல்படுங்கள்.உறவினர் தேடி வருவர். செல்வாக்கு உயரும். தள்ளிப்போன செயல்கள் முடியும். பணம் பல வழிகளில் செலவாகும்.

**கன்னி**
எதிர்பார்ப்பு நிறைவேறும். சாதகமான நிலை உருவாகும். பணவரவு திருப்தி தரும்.செல்வாக்கு உயரும். பொன், பொருள் சேரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். மனக்குழப்பம் தீரும். ஆதாயமான நாள்.

**துலாம்**
அலைச்சல் அதிகரிக்கும். சிலர் வெளியூர் செல்வர். செலவுகள் உண்டாகும்.வீடு, வாகன வகையில் செலவு கூடும். குழப்பம் மேலோங்கும். முயற்சியில் தடுமாற்றம் வரலாம். கவனம் தேவை.

**விருட்சிகம்**
குடும்பத்தில் செல்வாக்கு உயரும். முயற்சி வெற்றி பெறும். திடீர் பண வரவால் சங்கடம் விலகும். யோகமான நாள்.புதிய முயற்சியில் லாபம் காண்பீர்கள். உங்களுடைய திறமை பிறரால் மதிக்கப்படும்.

**தனுசு**
முக்கியமான வேலை ஒன்று முடியும். புதிய தொழில் முயற்சியில் இறங்குவீர்கள். அரசு வகையில் நல்ல செய்தி வரும்.போட்டியாளர் சதியை முறியடித்து முன்னேறுவீர்கள். செல்வாக்கு உயரும்.

**மகரம்**
வரவு அதிகரிக்கும்.குல தெய்வ அருளால் முயற்சி பலிதமாகும். எதிர்பார்த்த ஒன்றை அடைவீர்கள். இழுபறியாக இருந்த முயற்சி விஜபிகளின் ஆதரவுடன் நிறைவேறும்.

**கும்பம்**
செயலில் தடுமாற்றம் உண்டாகும். எதிர்பார்ப்பு இன்று தள்ளிப் போகும். குழப்பம் உண்டாகும். மற்றவர் செயலால் சங்கடப்படுவீர்கள். புதிய முயற்சி இன்று வேண்டாம்.எதிரி தொல்லை கூடும்.

**மீனம்**
அரசு வழி முயற்சிகள் அனுகூலமாகும். நண்பரால் உதவி உண்டு.விருப்பம் இன்று நிறைவேறும். மனதை வாட்டிய பிரச்னை விலகும். புதிய வாய்ப்பு தேடி வரும் அதனால் முன்னேற்றம் காண்பீர்கள்.

# இலங்கைக்கு நிவாரண பொருட்கள் அடுத்த வாரம் அனுப்பப்படுகின்றது!

*கொழும்பு, ஜுன் 10*

இலங்கைக்கு இரண்டாவது கட்டமாக நிவாரணப் பொருட்கள் அடுத்த வாரம் அனுப்பி வைக்கப்படவுள்ளது. இந்தப் பொருட்கள் தூத்துக்குடியிலிருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறையை சென்றடையும் என்று அமைச்சர் செஞ்சி மஸ்தான் தகவல் தெரிவித்துள்ளார்.

கடுமையான பொருளாதார நெருக்கடியை இலங்கை எதிர்கொண்டு வருகின்றது. இந்த நெருக்கடி நிலையிலிருந்து மக்களுக்கு உதவுவதற்காக தமிழக அரசு 40 ஆயிரம் தொன் அரிசி, 500 தொன் பால் மா 28 கோடி (இந்திய) ரூபாய் மருந்துப் பொருட்களை நிவாரணமாக அனுப்பி உதவ முதல்வர் மு. க. ஸ்டாலின் முன்வந்தார்.

இந்நிலையில், ஒரு தொகுதி நிவாரணப் பொருட்கள் சென்னையிலிருந்து அனுப்பப்பட்ட நிலையில், இரண்டாவது தொகுதி பொருட்களை அனுப்பும் பணிகள் விரைந்து முன்னெடுக்கப்படுகின்றன. அடுத்தவாரம் இந்தப் பொருட்கள் தூத்துக்குடியிலிருந்து அனுப்பிவைக்கப்படவுள்ளன.

(ஐ)

# தி. மு. க., அ. தி. மு. க. ஆட்சிகளில் ஆதினங்களில் தலையீடு இல்லை!

## தற்போது நடப்பது சதி என்கிறார் எடப்பாடி

*சென்னை, ஜுன் 10*

“தமிழகத்தில் தி. மு. கவும் ஆட்சியிலிருந்தது, அ. தி. மு. கவும் ஆட்சியில் இருந்தது. அப்போதெல்லாம் இந்த ஆதீன விவகாரங்களுக்குள் யாரும் நுழையவில்லை. இன்றைய ஆட்சியில் திட்டமிட்டு, ஏதோ ஒரு சதி செயல் நடைபெறுவதாகத்தான் நான் பார்க்கிறேன், இது ஒரு தவறான போக்கு”, என்று சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

நேற்றைய தினம் கட்சியின் நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழகத்தில் கந்து வட்டி மிகப்பெரிய கொடுமை. ஓர் ஆயுதப்படை காவலரே, கந்துவட்டி வாங்கி இறந்திருக்கிறார் என்று சொன்னால், கந்து வட்டியை தடை செய்ய இயலாத ஓர் அரசாகத்தான் தமிழக அரசைப் பார்க்க வேண்டியுள்ளது.

தமிழகத்தில் தி. மு. கவும் ஆட்சியிலிருந்தது, அ. தி. மு. கவும் ஆட்சியில் இருந்தது. அப்போதெல்லாம் இந்த ஆதீன விவகாரங்களுக்குள் யாரும் நுழையவில்லை. இன்றைய ஆட்சியில் திட்டமிட்டு, ஏதோ ஒரு சதிச் செயல் நடைபெறுவதாகத்தான் நான் பார்க்கிறேன்.

ஆனால், இன்று எந்த மதமாக இருந்தாலும், எந்த திருக்கோயில்களாக இருந்தாலும், அந்தந்த ஐதீகத்தின்படி வழிபாடு நடைபெற வேண்டும், அதுதான் முறை. அதுதான் காலங்காலமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, ஏதேதோ தவறான வழிகளில், யாருடைய பேச்சைக் கேட்டு செயல்படுகின்றனர். இதுவொரு தவறான போக்கு என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்” - என்றார்.

(ஐ)

# குடும்பத்துடன் சேர்ந்து வாழ பொது மன்னிப்பு வழங்குங்கள்

*வேலூர், ஜுன் 10*

கடந்த 30 ஆண்டுகளாக ஆசை, பாசங்களை இழந்துள்ளோம். பொது மன்னிப்பு வழங்கி எங்களை விடுவிக்க வேண்டும் என்று கோரி முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழங்கில் சிறை தண்டனை அனுபவித்து வரும் சாந்தன் தமிழக ஆளுநருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அவர் தனது விடுதலை தொடர்பில் தமிழக ஆளுநருக்கு அனுப்பிய கடிதத்தில், ”கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக சிறை வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும், குடும்பத்தை பிரிந்தும், ஆசா பாசங்களை மறந்தும் சிறை வாழ்க்கை வாழ்ந்து வருவதால் தனக்கு குடும்பத்தோடு இணைந்து வாழ வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் பொது மன்னிப்பு வழங்கி தன்னை விடுக்க வேண்டும்” என தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சாந்தன் இவ்வாறு ஆளுநருக்கு கடிதம் அனுப்புவது முதல்முறையல்ல. முன்னரும் இதேபோல பல கடிதங்களை அப்பியுள்ளார். இதனிடையே, அண்மையில் உடல்நிலை பாதிக்கப்பட்ட சாந்தன், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# தி. மு. கவின் சின்னத்தை முடக்கி கட்சி அங்கீகாரத்தை இரத்துசெய்க!

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு சுப்பிரமணியன் சுவாமி கடிதம்

*சென்னை, ஜுன் 10*

“தி. மு. க. சின்னத்தை முடக்கி, அந்தக் கட்சி அங்கீகாரத்தை இரத்து செய்ய வேண்டும்“ என தேர்தல் ஆணைக்குழுவுக்கு பா.ஜ.கவின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி கடிதம் அனுப்பியுள்ளார்.

இது தொடர்பில் தமிழக பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலில்,

1973ஆல் பகுத்தறிவு கொள்கையை பரப்புகிறேன் என்று, ஈ. வெ. ரா., பல்வேறு கூட்டங்களை நடத்தி வந்தார். காரைக்குடியில் நடந்த கூட்டத்தில், “பகுத்தறிவு கொள்கைக்கு எதிராக செயல்படும் பிராமணர்களை கொல்ல வேண்டும் என்றார். பிராமணர்கள் 3 சதவீதம் பேரால் தான், தொடர்ந்து உரிமை, வேலைவாய்ப்புகள் சூத்திரர்களுக்கு பறிபோய் இருக்கின்றன. “ஈ.வெ.ரா., சொன்னதை சூத்திரர்கள் அன்றைக்கே செய்திருந்தால், உரிமைகள் பறிபோவது தடுக்கப்பட்டு இருக்கும். இன்றைக்கும் குறிப்பிட்ட அந்த 3 சதவீதம் பேர், முக்கிய இடங்களில் அமர்ந்துள்ளனர்“ என்று தி.மு. க.,வின் செய்தி தொடர்பாளர் ராஜீவ் காந்தி பேசியுள்ளார்.

அரசியல் விமர்சகர் சுமந்த் சி ராமன், “தி.மு.க.,வில் செய்தி தொடர்பாளர் ராஜீவ் காந்தியின் கருத்துதான், தி.மு.க.,வின் கருத்தா?“ என, கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கு, தி.மு.க., தரப்பில் பதில் இல்லை. ஆக, மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி. “ஒரு குறிப்பிட்ட சாதியினரை படுகொலை செய்ய வேண்டும்“ என, ஒரு கட்சியின் செய்தி தொடர்பாளர் சொல்கிறார் என்றால், அவரின் கருத்தால், சமூகத்தின் அமைதி கெடும் கலவரம் வெடிக்கும். கருத்து சுதந்திரம் என்ற பெயரில், யார் வேண்டுமானாலும் எந்த கருத்தை வேண்டுமானாலும், சமூகத்தில் விதைத்து விட்டு, அப்படியே கடந்து போய் விட முடியாது.

எனவே, செய்தி தொடர்பாளர் சொன்ன அந்த கருத்து, அந்தக் கட்சியின் கருத்தாகதான் எடுத்து கொள்ள முடியும். ஓர் அரசியல் இயக்கம், சமூக அமைதிக்கு பங்கம் விளைவிப்பது போல நடந்து கொண்டால், மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் அடிப்படையில், அக்கட்சியின் அங்கீகாரத்தை, தேர்தல் ஆணைக்குழு இரத்து செய்ய முடியும் - என்றார்.

(ஐ)



# பாகிஸ்தான் தூதுவரினால் உலர் உணவுப்பை வழங்கல்

கொழும்பு, ஜுன் 10

முஸ்லிம் உரிமைக்கான அமைப்பின் ஏற்பாட்டில் தேவையுடைய மற்றும் வாழ்வாதாரத்தை இழந்த பொது மக்களுக்கு பாகிஸ்தான் தூதரக அனுசரணையுடன் உலர் உணவுப்பைகள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை கொழும்பு மாளிகாவத்தை பிரதீபா மண்டபத்தில் நடைபெற்றது.

பாகிஸ்தான் தூதுவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்க்கி பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந்த நிகழ்வில் கொழும்பு மாநகர சபை ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் சார்பிலான மாநகர சபை உறுப்பினர் கலீலுர் ரஹ்மான், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் முஸம்மில், முஸ்லிம் உரிமைக்கான அமைப்பின் சார்பாக செயலாளர் ரூமி அமித் மற்றும் பொருளாளர் ஜவ்பர் ஹாஜி ஆகியோர் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது அடையாளம் காணப்பட்ட மக்களுக்கு பொது மக்களுக்கு பாகிஸ்தான் தூதரக அனுசரணையுடன் உலர் உணவுப்பைகள் வழங்கப்பட்டன. (அ)

# மட்பாண்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பெரும் பாதிப்பு

## பொருளாதார நெருக்கடியே காரணம்

மன்னார், ஜுன் 10

**நாட்டில் நிதி நெருக்கடியால் ஏற்பட்டுள்ள பொருளாதார தட்டுப்பாடுகள் பொருட்களுக்கான விலை ஏற்றம் காரணமாக மன்னார் மாவட்டத்தில் தமிழர்களின் பாரம்பரிய தொழில்களில் ஒன்றாக காணப்படும் மட்பாண்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரங்கள் பாரியளவு பாதிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.**

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான், மடுக்கரை, செம்மண்தீவு கருக்காய் குளம் போன்ற பகுதிகளில் வசிக்கும் மட்பாண்ட தொழிலாளர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாடு, எரிபொருளுக்கான விலையேற்றம் காரணமாக சட்டி, பானை, அடுப்பு, சிட்டி விளக்குகள் போன்ற பொருட்களை கொள்வனவு செய்வதற்கு முன்பு போல் வியாபாரிகள் எவரும் அவர்களிடம் வந்து பெற்றுக் கொள்வது இல்லை என மட்பாண்ட தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதனால் தூர பிரதேசங்களுக்கு பொருட்களைக் கொண்டு சென்று கொடுத்தால் செலவு இரட்டிப்பாகிறது.

உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் யாவும் தேங்கி கிடப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபட்டு எரிபொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களும் தடையில்லாமல் விலை குறைவாக கிடைத்தால் மட்டுமே எமது பாரம்பரிய தொழிலை தொடர்ச்சியாக செய்ய முடியும். பலர் இந்த தொழிலில் இருந்து விலகி வேறு தொழிலுக்குச் சென்றுள்ளார்கள். எங்கள் காலத்தின் பின்பு தமிழர்களின் பாரம்பரிய தொழிலாக காணப்படும் இந்த மண்பாண்டத் தொழிலை தொடர்ந்து செய்வதற்கு ஆட்கள் இல்லை.

காலப்போக்கில் மன்னார் மாவட்டத்தில் இந்த மட்பாண்ட தொழில் அழிந்து போகக்கூடும் என மட்பாண்ட தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (அ)

# தொழிற்சங்க நடவடிக்கையினால் 5 நீர் மின் நிலையங்கள் செயழிப்பு

## 300 மெகாவொட் மின்சாரம் இழப்பு

கொழும்பு, ஜுன் 10

தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நீர்மின் உற்பத்தி சிலவற்றின் தொழிற்பாடுகள் செயலிழந்துள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

லக்ஷபான, நவலக்ஷபான, பொல்பிட்டிய, விமலசுரேந்திர மற்றும் கெனியோன் ஆகிய 5 நீர்மின் நிலையங்களின் மின் உற்பத்தி நடவடிக்கைகள் தற்காலிகமாக செயலிழந்துள்ளன.

இதன்காரணமாக குறித்த நீர்மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து கிடைக்க பெறும் 300 மெகாவொட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்புக்கு கிடைக்காது போகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று அதிகாலை முதல் யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு, கண்டி, கம்பஹா ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளிலும் ஹற்றன், கொட்டகலை உள்ளிட்ட பிரதேசங்களிலும் திடீர் மின் தடை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாடு அழிந்தாலும் தமிழர் மீதான அடக்குமுறையை அரசு நிறுத்தாது

## சபையில் கஜேந்திரன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 10

இலங்கை அழிவைச் சந்தித்தாலும் பட்டினியால் மக்கள் இறக்கும் நிலை வந்தாலும் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளை அரசு நிறுத்தப் போவதில்லை எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாரளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சபையில் தெரிவித்தார்.

சபையில் நேற்று முன்தினம் அவர் ஆற்றிய உரையில்,

மூன்று வேளை உணவுக்குக் கூட வழியில்லாமல் நாட்டு மக்கள் தவிக்கின்றார்கள். நாடு



பற்றி எரிகின்றது ஆனால், வடக்கில் சிங்கள - பௌத்த மயமாக்கல் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது.

குறிப்பாக முல்லைத்தீவில் கடற்படை முகாம் ஒன்றை அமைக்க கடற்படை கட்டுப்பாட்டில் உள்ள 600 ஏக்கர் காணி அளவீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு காணி உரிமையாளர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தபோது பாதுகாப்புப் படையினரால் அவர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். இதன்போது சுயாதீன ஊடகவியலாளரான கணபதிப்பிள்ளை குமணன் கடற்படையினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளார். தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# 2015-2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமைத்த 12 ஆணைக்குழுக்களுக்கு 52 கோடி ரூபா செலவு!

கொழும்பு, ஜுன் 10

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரால் 2015-2021 காலப்பகுதியில் நியமிக்கப்பட்டுள்ள 12 ஜனாதிபதி ஆணைக்குழுக்களுக்கு 52 கோடி ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

2015-2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இதுவரை 12 ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஆறு ஜனாதிபதி ஆணைக்குழுக்களும் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஆறு ஆணைக்குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் ஜனாதிபதி செயலகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2015-2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரால் நியமிக்கப்பட்ட 12 ஆணைக்குழுகளுக்கு 520,459,200 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

ஆணைக்குழுக்களுக்காக 2015 ஆம் ஆண்டு 43,000,000 ரூபாவும் 2016 ஆம் ஆண்டு 41,774,500 ரூபாவும் 2017 ஆம் ஆண்டு 55,000,000 ரூபாவும் 2018 ஆம் ஆண்டு 33,000,000 ரூபாவும் 2019 ஆம் ஆண்டு 92,000,000 ரூபாவும் 2020 ஆம் ஆண்டு 129,500,000 ரூபாவும் 2021 ஆம் ஆண்டு 126,184,700 ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு பல கோடி ரூபா மக்கள் பணத்தில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுக்களின் பரிந்துரைகள் முழுமையாக இதுவரை நாட்டில் அமுல்படுத்தப்பட்டது கிடையாது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் அறிக்கைகள் எவையும் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை.

இறுதியாக ஜுன் 6 ஆம் திகதி 2022-03-31 மற்றும் 2022-05-15 திகதிகளுக்கு இடையில் நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற தீவைப்பு, கொள்ளை மற்றும் கொலை உட்பட அனைத்து வகையான சொத்துக்கள் மற்றும் உயிர் சேதங்கள் குறித்து விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் விசாரணை ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதிபதி, ஜனாதிபதி வழக்கறிஞர் பீ.பீ. அலுவிஹாரே தலைமையிலான ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எஸ்.எம். விக்கிரமசிங்க, மேலதிக பிரதம மதிப்பீட்டாளர் என்.ஏ.எஸ் வசந்தகுமார ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் புவனெக ஹேரத் இதன் செயலாளராக செயல்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 80 வீதத்துக்கும் அதிகமான இலங்கையர் மலிவான உணவை உட்கொள்கின்றனர்!

## ஐக்கிய நாடுகள் சபை கூறுகிறது

**கொழும்பு, ஜூன் 10**

**இலங்கையில் உள்ள குடும்பங்களில் 80 சதவீதத்திற்கும் அதிகமானோர் குறைந்த அல்லது மலிவான உணவை உண்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.**

உலக உணவுத் திட்டத்தின் மாதாந்த அறிக்கையில் இது ஊட்டச்சத்து குறைபாட்டின் அபாயத்தை உயர்த்தியுள்ளதைக் காட்டுவதாக அந்த சபை மேலும் கூறியுள்ளது.

தொடர்ச்சியாக இரண்டு பருவங்களில் இருந்து நெல் அறுவடை குறைவதால் உணவுப் பாதுகாப்பின்மை அதிகரிக்கும் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் விலை 20 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் வழங்கல் பற்றாக்குறை மற்றும் அதிக உற்பத்திச் செலவு காரணமாக உள்ளூர் அரிசி வகைகளின் விலை 6வீதம் அதிகரித்துள்ளதாகவும் அது மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# பெரமுனவில் இணைந்த முன்னணி தொழிலதிபர்!

கொழும்பு, ஜூன் 10

பிரபல முன்னணி தொழிலதிபரான தம்மிக்க பெரேரா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பஸில் ராஜபக்ஷ பதவி விலகவுள்ளதனையடுத்து, பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் மூலம் ஏற்படவுள்ள வெற்றிடத்துக்கு தம் மிக்க பெரேரா நியமிக்கப்பட உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதன் பின்னர் அவர் அமைச்சராக பதவியேற்கவுள்ளதாகவும், அது முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பான முக்கிய அமைச்சுப் பதவி எனவும் தெரிய வருகின்றது.

நாட்டின் தொழில் முனைவோர் மற்றும் வலிபெல் ஒன் பி.எல்.சி தலைவரும் நிர்வாகப் பணிப்பாளருமான தம்மிக்க பெரேரா வெற்றிகரமான முதலீட்டாளராகவும் கருதப்படுகிறார்.

நாட்டின் பணக்காரர்களில் ஒருவராக அறியப்பட்ட தம்மிக்க, நிறுவன மீள்-பொறியியல் மற்றும் மறுமலர்ச்சியில் நிபுணத்துவத்தின் சின்னமாகவும் அறியப்படுகின்றார். அவரது அசாத்திய திறமையின் காரணமாக 23 நிறுவனங்களுக்குச் சொந்தக்காரர் ஆவார்.

உள்நாட்டுப் போரின் முடிவில் அவர் நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் முன்னோடியாகக் கருதப்படுகின்றார் என்று கொழும்பு செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (அ)

# வைத்தியர் ஷாபியின் நிலுவையை வழங்க சுகாதார அமைச்சு ஒப்புதல்!

கொழும்பு, ஜூன் 10

குருநாகல் போதனா வைத்தியசாலையின் மகப்பேறு மருத்துவ பிரிவுக்கு சிகிச்சைக்கு வந்த பெருமளவிலான பெண்கள் அவர்களுக்கு தெரியாமல் கருத்தடை செய்யப்பட்டதாக கூறப்பட்ட போலிக் குற்றச்சாட்டின் பேரில் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட விசேட வைத்திய நிபுணர் ஷாபி ஷிஹாப்தீன் பணிக்கு திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்.

அவர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட காலப் பகுதியில் வழங்கப்படாத ஏனைய கொடுப்பனவுகள் அனைத்தும் ஜூலை 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவ தற்கு சுகாதார அமைச்சு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளது.

நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகிய இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு முன்னிலையில் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

சேவையிலிருந்து கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்ட காலத்திற்கான நிலுவைத் தொகைகள், கொடுப்பனவுகள், இடைக்கால கொடுப்பனவுகள் மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள் ஆகிய சகல நிலுவைகளையும் மனுதாரர் ஷாபி ஷிஹாப்தீனுக்கு செலுத்த முடியும் என சட்டமா அதிபர் சட்டமா அதிபரும் முன்னர் நீதிமன்றத்தில் அறிவித்திருந்தார்.

இதேவேளை, குருநாகல் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சந்தன கண்டங்கமுவ நியமித்த ஒழுக்காற்று விசாரணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகத் தயார் என மனுதாரர் வைத்தியர் ஷாபி ஷிஹாப்தீன் மேன்முறையீட்டு நீதிமன்றில் அறிவித்தார்.

இதையெல்லாம் கருத்தில் கொண்டு, சஹாப்தீன் தனது மனுவை வாபஸ் பெறுமாறு விடுத்த கோரிக்கையை ஏற்று, மனு மீதான விசாரணையை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு முடிவு செய்தது. (அ)

# அரிசி தட்டுப்பாடு ஏற்படாது

கொழும்பு, ஜூன் 10

அரிசி தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சம் தேவையில்லை என விவசாய, வனவிலங்கு மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரிசி விடயத்தில் ஆரம்பத்தில் நிலைமை மோசமாக இருந்த போதிலும் தற்போது நல்லதொரு நிலை உருவாகி வருவதாக அமைச்சர் கூறினார்.

அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டால், அது ஆண்டின் கடைசி சில நாட்களுக்கு மட்டுமே இருக்கும் என்றும், அந்த தட்டுப்பாட்டுக்கும் தேவையான அரிசியை கொள்முதல் செய்ய வர்த்தக அமைச்சர் உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# தூவிலிஎல்ல நீர்வீழ்ச்சியில் நீராடியவர் மூழ்கி மரணம்!

கொழும்பு, ஜூன் 10

பலாங்கொடை-கூரகலை விகாரைக்கு வழிபாடு செய்ய வந்த நபரொருவர், அங்குள்ள தூவிலிஎல்ல நீர்வீழ்ச்சிக்கு நீராடச் சென்றபோது அடித்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த நபர் மாத்தறை-மாய்ம்மன பகுதியைச் சேர்ந்த 28 வயதான சந்திமால் புத்திக என்பவராவார்.

இவரோடு விகாரைக்கு பயணித்த குழுவினர் இவ்விடயம் தொடர்பில் கல்தோட்டைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இளைஞரின் சடலத்தை மீட்டுள்ள கல்தோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, தூவிலஎல்ல மற்றும் இப்பகுதி நீர்நிலைகளில் இத்தினங்களில் நீரின் வேகம் அதிகரித்துள்ளதால் மிக அவதானமாக நீராடுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கேட்டுள்ளனர். (அ)

# படகில் அவுஸ்திரேலியா சென்றவர்கள் விமானத்தில் திரும்பி அனுப்பப்பட்டனர்

கொழும்பு, ஜூன் 10

அவுஸ்திரேலியாவுக்குள் கடல் வழியாக சட்டவிரோதமாக நுழைய முயன்றபோது, கைது செய்யப்பட்ட 15 இலங்கையர்கள் நேற்று மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

நீர்கொழும்பை சேர்ந்த 20 முதல் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் குழு நேற்று பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

19 நாட்களுக்கு முன்னர் தமது பயணத்தை ஆரம்பித்த இந்த குழுவினர், பல நாள் இழுவைப் படகில் பயணித்தபோது அவுஸ்திரேலிய கடலோர காவல்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து அவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

அவர்கள் அவுஸ்திரேலிய விமானப்படையின் சிறப்பு விமானத்தின் மூலம், பண்டாரநாயக்க விமான நிலையத் துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், விமான நிலையத்தில் உள்ள குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 15 பேரிடமும் வாக்கு மூலங்களைப் பதிவு செய்ததன் பின்னர், நீர்கொழும்பு நீதவான் நீதி மன்றில் நேற்று ஆஜர்படுத்தவுள்ளனர். (அ)

# நீண்ட நாட்களின் பின்னர் மன்னாரில் டீசல், மண்ணெண்ணெய் விநியோகம்

மன்னார், ஜூன் 10

மன்னார் நகரில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் நீண்ட நாட்களின் பின்னர் நேற்று வியாழக்கிழமை காலை முதல் வாகனங்களுக்கான டீசல் விநியோகிக்கப்பட்டது.

நீண்ட நாட்களாக மன்னாரில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு டீசல் விநியோகிக்கப்படவில்லை. இதனால் வாகன உரிமையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

மேலும் தனியார் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வரும் பஸ்களுக்கும் டீசல் இல்லாமையினால் பஸ் உரிமையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

இந்த நிலையில் மன்னார் நகர் பகுதியில் உள்ள இரண்டு எரிபொருள் நிரப்பும் நிலையங்களிலும் நேற்று வியாழக்கிழமை முதல் வாகனங்களுக்கான டீசல் எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்பட்டது. மேலும் மன்னார் பள்ளிமுனை பிரதான வீதியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை காலை முதல் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது.

குடும்ப அட்டை பரிசீலிக்கப்பட்டு 500 ரூபாவுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. மேலும் பெற்றோல் மட்டுப் படுத்தப்பட்ட அளவில் வழங் கப்பட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (அ)

# திரிபோஷ இல்லை!

கொழும்பு, ஜூன் 10

கர்ப்பவதித் தாய்மார்களுக்கு வழங்கப்பட வேண்டிய திரிபோஷ இல்லை என சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார சேவைகள் பணியகத்தின் பணிப்பாளர் வைத்தியர் சித்ரமாலி டி சொய்சா தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் முதல் திரிபோஷாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சோள விளைச்சல் இல்லாமையே திரிபோஷா உற்பத்தி தடைப்படுவதற்கு முக்கிய காரணமாகும் எனவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், கர்ப்பவதி தாய்மார்களுக்கு திரிபோஷ வழங்குவதற்கு வெளிநாட்டு நிறுவனங்களிடம் உதவி கோரப்பட்டுள்ளதாக விசேட வைத்திய நிபுணர் மேலும் தெரிவித்தார். (அ)

## வாடகைக்கு வாகனம் பெற்று மோசடி; மூவர் கிளிநொச்சிப் பகுதியில் கைது!

கிளிநொச்சி, ஜூன் 10

வாகனங்களை வாடகைக்கு எடுத்து அவற்றை திருப்பிக் கொடுக்காமல் மோசடி செய்த பல சம்பவங்களுடன் தொடர்பு டைய மூன்று சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள் ளனர்.

கேகாலை விசேட குற்றத் தடுப்புப் பிரிவு மற்றும் மத்து கம விசேட குற்றத்தடுப்புப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்ட ஏழு சம்பவங்கள் தொடர்பில் மேற் கொள்ளப்பட்ட விசாரணை களை அடுத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரிடமும் ஐந்து கார்களும், இரண்டு சிற்றூர்திகளும் ஜீப் ரக வாகன மொன்றும் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. கிளிநொச்சி பகுதியில் கைது செய்யப்பட்ட இச் சந்தேகநபர் கள் 27, 29 மற்றும் 37 வயது டையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் பிலிமத்தலாவ மற்றும் தந்துரே ஆகிய பிரதே சங்களைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. சந்தேகநபர் கள் மூவரும் மாவனல்லை நீதவான் நீதிமன் றில் முற்படுத் தப்படவுள்ளனர். (அ)

## மின் பொறியியலாளர் சங்கம் போராட்டத்தில் ஈடுபடத் தடை

கொழும்பு, ஜூன் 10

மின்சார பொறியியலாளர் சங்க தலைவர் அனில் ரஞ்சித் இந்துவர, அதன் ஏனைய உறுப் பினர்கள் எதிர்வரும் 14 நாட்க ளுக்கு பணிப்புறக்கணிப்பில் ஈடுபட நீதிமன்றம் தடை உத் தரவு பிறப்பித்துள்ளது.

மின்சார சட்டத்தில் கொண்டுவரப்படவுள்ள புதிய திருத்தங்களுக்கு எதிர்ப்பு தெரி வித்து இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் உள்ளிட்ட சில தொழிற்சங்கங்க ளால் நேற்று முன்தினம் நள் ளிரவு ஆரம்பிக்கப்பட்டவிருந்த பணிப்பகிஷ்கரிப்பு தற்காலி கமாக கைவிடப்பட்டது. (அ)

## பல்வேறு குற்ற செயல்களுடன் தொடர்புடைய இருவர் கைது!

கொழும்பு, ஜூன் 10

பல குற்றச் செயல்கள் தொடர் பில் தேடப்பட்டு வந்த இரண்டு சந்தேக நபர்களை ஹெரோயின் போதைப்பொருளுடன் பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

அத்துருகிரிய பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றி வளைப்பில் 6 கிராம், 430 மில்லிகிராம் மற்றும் 6 கிராம் ஹெரோயினுடன் குறித்த சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துருகிரிய மற்றும் நவக முவ பொலிஸ் பிரிவுகளுக்கு உட் பட்ட பகுதிகளில் பதிவாகியுள்ள மோட்டார் சைக்கிள்கள் மற் றும் பல உடைமைகள் திருட்டு சம்பவங்களுடன் இவ்விருவ ரும் தொடர்பு டையவர்கள் என மேலதிக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (அ)

# வங்கிகளில் மக்களின் பணத்தை அரசு எடுத்துவிடும் என்பது பொய்

### இலங்கை வங்கி வடபிராந்திய முகாமையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

**வங்கிகளில் உள்ள மக்களின் பணத்தை அரசாங்கம் எடுத்துவிடும் என்பதில் உண்மையில்லை என இலங்கை வங்கியின் வடபிராந் திய உதவி பொது முகாமையாளர் வ. சிவானந்தன் தெரிவித்தார்.**

வங்கிகளில் மக்களால் வைப்பு செய்யப்பட்டுள்ள பணத்தை தற்போதைய பொரு ளாதார நெருக்கடியில் அரசாங் கம் எடுத்து விடும் என தெரி விக்கப்படுவதில் உண்மை தன்மை இல்லை என அவர் குறிப்பிட்டார்.

இலங்கை வங்கியின் யாழ்ப் பாண பஸ் நிலைய கிளை திறப்பு விழாவில் பிரதம விருந்தினரா கக் கலந்து கொண்டு உரையாற் றும்போதே அவர் மேற்கண் டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

கடந்த காலங்களில் கொரோனா என்ற பெரும் சவாலை எதிர்கொண்டு இருந் தோம்.

அதேபோல நாடு தற்போது பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவை எதிர்கொண்டாலும் அதனை ஒரு சவாலாக எதிர்கொண்டு மக்களின் நம் பிக்கை, எங்கள் பங்களிப்பு எல்லாவற்றையும் சேர்ந்து இந்த நாட்டை மீண் டும் கட்டி யெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

அதற்கு வங்கிக் கட்ட மைப்பு என்பது பொருளாதா கட்டமைப்பில் இன்றியமை யாத ஒன்றாகும். வங்கி கட்ட மைப்பு என்பது இல்லாவிட் டால் நாட்டின் பொருளாதா ரத்தை சமன் செய்ய முடியாது.



நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பு வீழ்ச்சி அடைய மாக இருந்தால் நாடு அதால பாதாள நிலைக்கு சென்றுவி டும். தற்போது மக்கள் பலரு டைய எண்ணங்கள் வங்கிகளில் உள்ள காசுகளை அரசாங்கம் எடுத்துவிடக்கூடும் என்று பலவிதமாக யோசிக்கிறார்கள்.

உண்மையாகவே அது பொய்யானவிடயமாகும். வங்கி கட்டமைப்பு இந்த நாட் டில் இல்லாவிட்டால் நாட்டின் பொருளாதாரமானது அதல பாதாளத்துக்கு சென்றுவிடும்.

எனவே வங்கி கட்டமைப்பை சீராக பாதுகாக்கவேண்டியதும் தொடர்ந்தும் செயற்பாட்டில் வைத்திருக்கவேண்டியதும் வாடிக்கையாளர்கள், பொது மக்கள்தான்.

ஆகவே வங்கிக் கட்ட மைப்பு பற்றி நீங்கள் தவறான வதந்திகளை புரிதலை ஏற்ப டுத்தவேண்டாம் - என்றார். (அ-03)

## இலங்கை வங்கி யாழ்.பஸ் நிலைய கிளை புதிய இடத்தில் வைபவ ரீதியாகத் திறப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 10

இலங்கை வங்கியின் யாழ். பஸ் நிலையக் கிளை இடம் மாற்றலாகி புதிய இடத்தில் வைபவ ரீதியாக நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை வங்கியின் யாழ்ப்பாண பஸ் நிலைய கிளை இடம்மாற்றப்பட்டு புதிய இடத்தில் நவீன தொழில்நுட்ப முறைகளுடன் கூடிய புதிய பரிமாணத்துடன் திறந்து வைக்கப்பட்டது

மதத் தலைவர்களின் ஆசி உரையுடன் ஆரம்பமாகிய வங்கிக் கிளையின் புதிய அலுவலக திறப்பு விழாவில் விருந்தினர்கள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு மேள வாத்தியங்களுடன் திறப்பு விழா இடத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

பின்னர் புதிய கிளை இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவி பொது முகா மையாளரால் நாடா வெட்டி வைபவ ரீதியாக திறந்துவைக் கப்பட்டது

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கி யின் வட பிராந்திய உதவி பொது முகாமையாளர் வ. சிவா னந்தன், இலங்கையின் வட மாகாண செயல்பாட்டு முகாமையாளர் திரு சி.ஆனந்த ராஜா, இலங்கை வங்கியின் யாழ். உயர்தர கிளையின் முகாமையாளர் கு. சிவஞான சுந்தரம், யாழ்.மேற்கு பிரதேச முகாமையாளர் திருமதி நி. சுரேந் திரராஜ், சிறப்பு விருந்தினராக நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி அ.ஜெயகுமரன், இலங்கை வங்கியின் ஏனைய கிளை முகாமையாளர்கள் வங்கியின் வாடிக்கையாளர்கள் என பலரும் கலந்துகொண் டனர். (அ-03)

# ஏற்கனவே பறிக்கப்பட்ட அதிகாரங்களை புதிய அரசமைப்பு மூலம் வழங்கவேண்டும்

### சுரேஸ் பிரேமச்சந்திரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 10

பாராளுமன்றம் மாகாண சபை, உள்ளூராட்சிகளிடமி ருந்து பறிக்கப்பட்ட அதிகாரங் களை புதிய அரசியல் திருத்தம் ஊடாக கொடுக்கவேண்டும். இதுவே நாட்டை பொருளா தார ரீதியிலும் ஜனநாயக ரீதியி லும் முன்னேற்றப் பயன்படு மென ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலை வரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

தற்போது 21 ஆவது திருத் தம் தொடர்பில் பேசப்படுகின் றது. இந்த 21ஆவது திருத்தம் என்பது 19ஆம் திருத்தத்தை ஒத்த ஒன்றே. ஆனால் அதனை முழுமையாக 19ஆம் திருத்தத் தின் வடிவம் எனக் கூறமுடி யாது. 19ஆவது திருத்தத்தில் உள்ள பல விடயங்கள் 21 ஆவது திருத்தத்தில் இல்லை.

19ஆம் திருத்தச் சட்டத்தை கொண்டுவருவதன் ஊடாக மீளவும் பாராளுமன்றத்துக்கு அதிகாரங்களை கொடுக்க முடியும் என்பது மாத்திரமல்ல பல விடயங்களை நடைமுறைப் படுத்தலாம். நாடு பொருளா தார ரீதியாக பலமடைய வேண் டுமாக இருந்தால் மாகாணங் கள் விருத்தி அடைய வேண் டும்.

மாகாணசபை ஒழுங்காக இயங்கவில்லை மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை மாகாணசபை சரியாகச் செலவு செய்யவில்லை என மகிந்த தெரிவித்திருந்தார். இதைப் பற்றி பேச மகிந்த, கோட்டா பய ஆகியோருக்கு என்ன யோக்கியதை இருக்கிறது.

நாட்டை மிக மோசமான பாதையில் கொண்டு செல்ல அனைத்து விடயங்களையும் செய்துவிட்டு ஏனையவர்க ளுக்கு ஆட்சியதிகாரம் தெரியாது எனக்கூற எந்த யோக்கியதையும் கிடையாது.

உலகில் அதிகளவு எண் ணிக்கையில் இராணுவத்தி னரை வைத்திருக்கும் நாடுகளில் 14 ஆவது இடத்தில் இலங்கை இருக்கிறது. இந்த பெரும்படை தேவைதானா? இதற்கு சிங்கள தரப்பினர் யாருமே வாய் திறந்து பேசவில்லை. இந்த நாட்டின் வருமானத்தில் கால் பங்கினை விழுங்கும் இந்த படையினரை யாருக்கு எதிராக போராட வைத்துள்ளீர்கள்.

அரசாங்கமே நாட்டினை இந்த நிலைமைக்கு கொண்டு வர காரணம். பெருமளவு இராணுவத்தினரை வைத்தி ருக்கும் அவசியம் இல்லை. இராணுவத்தைப் படிப்படியாக குறைப்பதற்கு ஏதாவது வழி முறையை வைத்திருக்கின்றீர் களா? தற்போது உள்ள இராணு வம் என்ன செய்கிறது? முன் பள்ளி நடத்துவது, தமிழ் மக்களின் விவசாய நிலங்க ளைப் பறிமுதல் செய்து அங்கு விவசாயம் செய்வது, தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள பௌத்த விகாரைகளை கட்டுவதையே இராணுவத்தினர் செய்கின்றனர்.

கோட்டா கோ கமவில் போராடும் இளைஞர்கள், எதிர்க் கட்சிகள், இடதுசாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். இதில் கவனம் செலுத் தாவிட்டால் மீண்டும் தவறு களைச் செய்யவேண்டியே வரும் - என்றார். (அ)

## மின் உற்பத்தியால் வருடாந்தம் 500 பில்லியன் ரூபாய் நட்டம்!

கொழும்பு, ஜூன் 10

மின்சாரத்தை உற்பத்தி செய் வதற்கு வருடமொன்றுக்கு 750 பில்லியன் ரூபா செலவிடப்படு கின்ற போதிலும், 250 பில்லி யன் ரூபாவே மின்சாரக் கட்ட ணம் மூலம் அறவிடப்படுவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதன்படி 500 பில்லியன் ரூபா பற்றாக்குறை நிலவுவ தாகவும், பற்றாக்குறையை ஈடு கட்ட மின்சார கட்ட ணத்தை அதிகரிக்க இலங்கை மின்சார சபை முன்மொழிந் துள்ளதாக வும் அமைச்சர் கூறினார்.

மின் கட்டணத்தை அதிக ரிப்பதற்கு பதிலாக உற்பத்தி செலவை குறைக்க வேண்டும் என அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

ஈழநாடு



# கச்சதீவுக்கொரு தீர்வு காண்போம்!

- உதயை மு. வீரையன்



இலங்கை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. இந்தியா எப்போதும் போல இப்போதும் ஆதரவு கரம் நீட்டி நிற்கிறது. துன்பம் நேரிட்டால் துணை நிற்பது மனிதநேயம் என்பது சரிதான். ஆனால், மனிதநேயம் கொண்டவர்களுக்கு துணை நிற்பது என்பது அதைவிட சரியானது.

இலங்கையின் நெருங்கிய அண்டை நாடாக பல நூற்றாண்டு கால உறவு இந்தியாவுக்கு உள்ளது. அங்கு மக்களாட்சி, நிலைத்த தன்மை, பொருளாதார மீட்சி திரும்பிட இந்தியா தனது முழுமையான ஆதரவை அளிக்கிறது. அதற்காக கடந்த மாதம் ரூ. 11,400 கோடி நிதியுதவியை இந்தியா வழங்கியது. மேலும் மருந்து, உணவுப் பொருள்களையும் இலங்கைக்கு அனுப்பியது. தமிழக அரசும் தனது பங்கிற்கு ரூ. 45 கோடி அளவில் உதவிப் பொருட்களை அனுப்பி வைத்தது.

இந்திய அரசாங்கத்தினால் "நட்பு நாடு" என்று கூறப்படும் இலங்கை, தமிழ்நாட்டு மீனவர்களை நாள்தோறும் வேட்டையாடுகிறது. இதுவரை ஆயிரக் கணக்கான மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களை தொழில் செய்ய விடாமல் பிடித்து, அடித்து, அவமானப்படுத்தி சிறைபிடிக்கிறது. மீனவர்களின் வாழ்வாதாரம் பறிக்கப்படுவதை இன்னும் எத்தனை காலம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பது?

2022 ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள் சமயத்தில் 68 தமிழக மீனவர்கள் இலங்கைச் சிறையில் கைதிகளாக அடைக்கப்பட்டிருந்தனர். இராமேஸ்வரம் மண்டபம் பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற 43 மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர். இதே போல் புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களை படகுகளுடன் அடுத்தடுத்த நாள்களில் சிறைபிடித்துச் சென்றனர்.

உயர்நீதிமன்றம் உத்தரவிட்டும், மத்திய அரசு முயற்சி மேற்கொண்டும் விழா நாள்களில் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. தமிழக அரசுத் தரப்பில், "கைது செய்யப்பட்ட மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்பவர்களே தவிர, தீவிரவாதிகள் இல்லை. அவர்கள் காரணமின்றி துன்புறுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்" என்று கூறப்பட்டது.

கடந்த ஆண்டில் மட்டும் இலங்கை கடற்படையினர் 19 முறை நம் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். பல படகுகள் அழிக்கப்பட்டு ஐந்து மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதுவரை 73 படகுகளை பறிமுதல் செய்துள்ளனர். அவற்றைத் திருப்பித் தரவில்லை. அன்று முதல் இன்று வரை, தமிழக முதல்வர்கள் இந்திய பிரதமர்களுக்கு கடிதம் எழுதிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

மத்தியில் அன்று காங்கிரஸ் ஆண்டது. இப்போது பாஜக ஆள்கிறது. ஆனாலும் எந்த மாறுதலும் இல்லை. நிலைமை அப்படியே தொடர்கிறது. நமது மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படும் போதுதான் கச்சதீவு கவனத்துக்கு வருகிறது. கச்சதீவு நமது கட்டுப்பாட்டில் இருந்தபோது நம் மீனவர்கள் தாக்கப்படவில்லை. கச்சதீவு இலங்கைக்கு கைமாறிய பிறகுதான் இலங்கைக் கடற்படைக்கு துணிச்சல் வந்திருக்கிறது.

கச்சத்தீவு இந்தியாவின் ஒரு பகுதி. நாட்டின் எந்தவொரு பகுதியையும் வேறு நாட்டிற்கு விட்டுக் கொடுப்பதென்றால், இந்திய அரசியல் சட்டம் 368-ஆம் பிரிவின்படி நாடாளுமன்றத்தில் விவாதித்து, ஒப்புதல் பெற்று அதற்கான சட்டம் இயற்றப்பட வேண்டும்.

இந்த தீவு விஷயத்தில் எந்த விதிமுறையும் பின் பற்றப்படவில்லை. 1974-ஆம் ஆண்டு இந்திய அரசு ஓர் ஒப்பந்தத்தின் வாயிலாக இலங்கைக்கு கச்சதீவைக் கொடுத்து விட்டது. நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெறாத காரணத்தால் இந்த ஒப்பந்தம் செல்லாது என்று தமிழ்நாட்டின் சார்பாக 1991-ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் ஜெயலலிதா உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார்.

உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு எழுத்துபூர்வமாக பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது. அதில் "கச்சத்தீவு எந்த நாட்டுக்கும் சொந்தமில்லாமல் இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கச்சதீவுக்கு யார் உரிமை கொண்டாடுவது என்ற பிரச்னை இந்தியா - இலங்கை இடையே நீடித்து வந்தது. அதைத் தொடர்ந்து இந்திய-இலங்கை கடற்பகுதியில் சர்வதேச எல்லைக் கோட்டை நிர்ணயித்தபோது கச்சத்தீவு இலங்கை வரம்புக்குள் சென்று விட்டது" என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

"அந்தத் தீவைச் சுற்றியுள்ள கடற்பகுதியின் மீன் பிடிக்கும் உரிமை தமிழ்நாட்டுக்குக் கிடையாது. இருந்த போதும் மீன் பிடிக்கும்போது இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் தமிழக மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது" என்றும் பிரமாண பத்திரத்தில் மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது.

கச்சதீவு யாழ்ப்பாணத்திலிருந்து 70 கி.மீ. தொலைவிலும், இராமேஸ்வரத்திலிருந்து 18 கி.மீ. தொலைவிலும் இருக்கிறது. இதன் மொத்தப் பரப்பளவு 1.15 கி.மீ. புனித அந்தோணியார் திருக்கோயில் மட்டுமே அங்கே இருக்கிறது. வேறு எவ்விதக் கட்டுமானமும் இல்லை. 1974-ஆம் ஆண்டு இந்திய பிரதமராக இந்திரா காந்தியும், இலங்கை பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயகவும் இருந்தபோது இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டது.

அப்போதைய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஸ்வரண்சிங் 1974 ஜூலை 23 அன்று கச்சதீவை இலங்கைக்குக் கொடுத்துவிட இந்தியா முடிவெடுத்து விட்டதை நாடாளுமன்றத்தில் அறிவித்தார். 1976-இல் மீண்டும் ஒருமுறை இது தொடர்பாக இலங்கையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

இந்திய - இலங்கை கடற்பகுதியில் சீனாவின் ஆதிக்கத்தை ஒடுக்குவதற்கு கச்சதீவைக் கொடுத்து சிறிமாவோ பண்டாரநாயக இலங்கையில் செல்வாக்கு பெற்று பதவியில் நீடிப்பதற்காக இந்திரா காந்தி எடுத்த ராஜதந்திர முடிவு என்றும், 40 ஆண்டுகள் கழித்து தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் குரல் எழுப்புகின்றன என்றும் அப்போது ஆளும் தரப்பில் கூறப்பட்டது.

தமிழ்நாட்டில் அப்போது திமுகதான் அதிகாரத்தில் இருந்தது. திமுக தலைவர் மு. கருணாநிதியே முதலமைச்சராகவும் இருந்தார். அப்போது திமுக - காங்கிரஸ் கூட்டணி வலுவாகவே இருந்தது. இருந்தும் மாநில அரசின் ஒப்புதல் இன்றி மத்திய அரசே ஒரு தரப்பாக முடிவெடுத்தது. இலங்கை நட்பு நாடு என்ற முறையில் கச்சத்தீவை இலங்கைக்குத் தாரை வார்த்தது.

அதன் தொடர்ச்சியாகவே இப்போது இந்த பிரச்னை எழுந்துள்ளது. மாநில அரசு மத்திய அரசிடம் விண்ணப்பம் வைத்துள்ளது. இந்தியாவின் தயவை எதிர்பார்க்கும் ஒரு நாடு இந்தியா வின் வேண்டுகோளை மறுதலிக்காது என்று எதிர்பார்க்கின்றனர்.

கச்சதீவு தமிழ்நாட்டின் இராமநாதபுரம் பகுதியை ஆண்ட சேதுபதிகளுக்கு வருவாய் தரும் தீவாக முன்பு இருந்தது. 1947-இல் ஜமீன்தாரி ஒழிப்பு சட்டம் வரும் வரை அது அவர்களது ஆட்சியில்தான் இருந்தது. இதற்கு ஆதாரங்களும், ஆவணங்களும் உள்ளன.

இந்தத் தீவு முத்துக் குளிக்கவும், மூலிகைச் செடி, கொடி, வேர்களைக் கொண்டு வரவும், மீன்பிடித் துறையாகவும் பயன்பட்டு வந்தது. அந்தத் தீவினை சேதுபதிகளே குத்தகைக்கு விட்டு வருவாய் பெற்று வந்தனர். இவ்வாறு இராம நாதபுரம் சேதுபதிகளின் ஆட்சியில் கச்சதீவு இருந்து வந்தது என்பதற்கு 1822 முதல் வரையறையான சான்றுகள் உள்ளன.

சேதுபதிக்கு 69 கடற்கரை ஊர்களும், 8 தீவுகளும் உரிமை உடையனவாய் இருந்தன. அந்த எட்டு தீவுகளில் ஒன்றுதான் கச்சதீவாகும். 1822 ஆம் ஆண்டு ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி, சேதுபதியிடம் 69 கடற்கரை ஊர்களில் வணிகம் செய்யவும், தீவுகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தது.

இந்திய அரசோடு இராமநாதபுரம் சமஸ்தானம் இணைந்தபோது இராமநாதபுரம் மன்னருக்கு சொந்தமான கச்சதீவும் இந்தியாவோடு சேர்ந்து விட்டது. இந்த உண்மைகளையெல்லாம் மறைத்து விட்டு, கச்சதீவு இலங்கைக்கே சொந்த மானது என்று உச்சநீதி மன்றத்திலேயே இந்திய அரசாங்கம் கூறியுள்ளது.

இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ், புதுதில்லி வந்தபோது செய்தியாளர்களை சந்தித்தார். "கச்சதீவை இலங்கை வசம் ஒப்படைக்கும் ஒப்பந்தத்தில் முறைப்படி அப்போதைய இந்திய பிரதமர் இந்திரா காந்திதான் கையொப்பமிட்டுள்ளார். அதன்படி சர்வதேச எல்லைக்குட்பட்ட கச்சதீவு இலங்கையின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஒப்பந்தத்தில் இலங்கை மீனவர்களுக்கும் இலங்கைக்கும் கச்சதீவில் உள்ள உரிமைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த விஷயத்தில் இந்திய அரசின் நிலை தெளிவாக உள்ளது. எனவே கச்சதீவை இந்தியாவிடம் திரும்ப ஒப்படைக்கும் பேச்சுக்கே இடமில்லை" எனத் தெரிவித்தார்.

இந்திய அரசின் பிரமாண வாக்குமூலம் இதையும் விஞ்சி விட்டது. மீனவர் பிரச்னை தலைதூக்கும் போதெல்லாம் கச்சதீவு பிரச்னையும் தலையெடுக்கும். அந்த அளவுக்கு அவை இரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. அதை இரு நாடுகளும் கவனத்தில் கொள்வது நல்லது.

கச்சதீவு ஆண்டாண்டு காலமாக தமிழகத்துக்கே சொந்தமாக இருந்து வந்தது. அதுவே தமிழக மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்கு எல்லையாகவும் இருந்து வந்தது. அதனை இந்திய அரசு, 1974-ஆம் ஆண்டு இலங்கைக்கு தூக்கிக் கொடுத்து விட்டது. அப்போது முதலே மீனவர்களின் பிரச்னை தொடங்கி விட்டது.

1974-ஆம் ஆண்டு ஒப்பந்தம் கச்சதீவை இலங்கைக்கு அளித்தது. 1976-ஆம் ஆண்டு ஒப்பந்தம் கச்சதீவு பகுதிக்கு தமிழக மீனவர்கள் போகக் கூடாது, மீன் பிடிக்கவும் கூடாது. ஆண்டுதோறும் நடக்கும் அந்தோணியார் திருவிழாவுக்கும் மக்கள் போகக் கூடாது என்று முற்றுப் புள்ளி வைத்துவிட்டது.

1991-ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் கொடியை ஏற்றிவிட்டு அப்போதைய முதல்வர் ஜெயலலிதா கச்சதீவை மீட்கப் போவதாக சபதம் செய்தார். "தமிழக மீனவர் நலன் காக்க கச்சதீவை மீட்போம்" என்ற முழக்கத்தை முன்வைத்தார். 1991 அக்டோபர் 4-ஆம் நாள், தமிழக சட்டப்பேரவையில் கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்கக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கச்சதீவை மீட்க வேண்டும் என்ற கோரிக்கை இப்போது மறுபடியும் எழுந்துள்ளது. தமிழக மீனவர்களின் வாழ்வாதார உரிமையைத்தான் நாம் கேட்கிறோம். காங்கிரஸ் ஆட்சி செய்த தவறைத் திருத்தம் செய்ய அடுத்தடுத்து வரும் ஆட்சிகளுக்கு அதிகாரம் இருக்கிறது. அதனை நிரூபிக்க இது ஒரு வாய்ப்பு. இப்போதே கச்ச தீவுக்கொரு தீர்வு காண்போம்.

# ரணிலின் அரசியல் சதுரங்கம்?

**யதீந்திரா**



சில வாரங்கள் வரையில், ரணிலின் அரசியல் வாழ்வு கிட்டத்தட்ட முடிந்துவிட்டதான ஒரு அனுமானமே பரவலாக இருந்தது. ஆனால், ராஜபக்சக்களின் வீழ்ச்சி, ரணில் விக்கிரமசிங்கவை ஆறாவது பிரதமராக்கியிருக்கின்றது. இதன் மூலம், ரணில் - தனது அரசியல் எதிர்காலம் தொடர்பான அனைத்து ஆருடங்களையும் ஒரு ஆசனத்தின் மூலம் தோற்கடித்திருக்கின்றார். ரணிலின் பதவியேற்பு தொடர்பில், பலவாறான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. அவரது நியமனம் ஜனநாயகரீதியானதல்ல - அது முறையானதல்ல என்று கூறுவோர் உண்டு. ரணில் விக்கிரமசிங்கவின் நியமனத்தை, ஜனநாயகரீதியில் பார்க்க முடியுமென்று நான் கருதவில்லை.

இது அடிப்படையில் நெருக்கடி நிலையை கையாளுவதற்கான ஒரு தந்திரோபாய நகர்வு. தந்திரோபாய நகர்வுகளுக்கும் ஜனநாயகத்திற்கும் என்ன தொடர்பு? இதில் வெளித்தெரியாத டீல்கள் இருக்கலாம். அதிகார அரசியலில் டீல்கள் தவிர்க்க முடியாதவை அதையும் விட்டுவிடுவோம். இவ்வாறான எதிர் கருத்துக்களுக்கப்பால், இன்றைய சூழலில் ரணில் விக்கிரமசிங்க நிலைமைகளை சமாளிக்கக் கூடிய ஒருவர் என்பதில் சந்தேகமில்லை. தென்னிலங்கையில் மட்டுமல்ல, தமிழர்கள் மத்தியிலும் அவ்வாறான அப்பிராயம் பரவலாக உண்டு.

ரணில் ஒரு நரியென்னும் அப்பிராயம் தமிழ் தேசியவாதிகள் மத்தியிலுண்டு. நான் தமிழ் அரசியலில் ஈடுபட ஆரம்பித்த போது, படித்த தமிழர்கள் ரணில் விக்கிரமசிங்கவை நரியென்று கூறுவதை பரவலாக கேட்டிருக்கின்றேன். அதாவது, அவர் ஒரு தந்திரசாலி. அவரிடம் கவனமாக இருக்க வேண்டுமென்னும் அச்சத்திலிருந்தே, மேற்படி பார்வை உருவாகியது. ஜே.ஆர்.ஜெயவர்த்தன தொடரபிலும் தமிழ் அரசியலாளர்கள் மத்தியில் இவ்வாறான பார்வையே உண்டு. ஜெயவர்த்தன வழிவந்த ஒருவர் என்பதால் தான், ரணிலையும் பலர் அவ்வாறு உச்சரிக்கின்றனர்.

இங்கு நரியென்னும் அடைமொழி, அரசியல் அர்தத்திலேயே பயன்படுத்தப்படுகின்றது. ஒரு தலைவன் என்பவன், நரியாகவும் இருக்க வேண்டுமென்பது, மாக்கியவல்லியின் அறிவுரை. மாக்கியவல்லியின் பார்வையில், ஒரு தலைவர் என்பவர் சிங்கமாகவும் நரியாகவும் இருக்க வேண்டும். ரணில் மாக்கிய வல்லியின் கூற்றுக்கு இணையான ஒரு அரசியல்வாதி. ரணிலின் மீதுள்ள அச்சத்தின் காரணமாகவே, பிரபாகரன், தேர்தல் பகிஸ்கரிப்பின் மூலம், அவரை தோற்கடிக்கும் வியூகத்தை வகுத்திருந்தார்.

2005 தேர்தலில், தமிழ் மக்கள் பெருவாரியாக வாக்களித்திருந்தால், நிச்சயம், ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருப்பார். ரணிலின் புத்திசாதுர்யம் மிக்க வியூகங்களை எதிர்கொள்வதை விடவும், கடும்போக்குவாதியொருவரின் யுத்தத்தை எதிர்கொள்வதையே, பிரபாகரன் விரும்பினார். இறுதியில் அவரது தெரிவு அவருக்கே அழிவானது. தங்களின் வெல்ல முடியாத அரசியல் எதிரிகளை, தற்கொலை தாக்குதலின் மூலம் வீழ்த்துவே, புலிகளின் வழமையான அரசியல் தந்திரோபாயமாகும். ரணில் விக்கிரமசிங்கவின் விடயத்தில், வழமைக்கு மாறாக, தமிழர்களின் வாக்குகளை கொண்டே, ரணிலின் அரசியல் எதிர்காலத்தை பிரபாகரன் தோற்கடித்தார்.

இப்போது அவர் பிரதமராக வந்திருக்கும் பின்னணி தொடர்பான, விமர்சனங்களுக்கு அப்பால், இன்றைய சூழலை கையாளுவதற்கு ரணிலை விடவும் வேறொரு பொருத்தமான நபர் இல்லையென்பதை பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். 2019 நாடாளுமன்ற தேர்தலில், படுமோசமான தோல்வியை சந்தித்திருந்த ரணில் விக்கிரமசிங்க, ஒரேயொரு ஆசனத்தின் மூலம் நாட்டின் பிரதமராக வந்திருக்கின்றார் என்றால், அது அவரது புத்திக் கூர்மையன்றி, வேறொன்றுமில்லை.

ராஜபக்சக்கள் மிகவும் திட்டமிட்டு இதனை செய்திருக்கின்றனர் என்றும் சிலர் கூறுகின்றனர் . இதனை நான் சரியான கணிப்பாக பார்க்கவில்லை. ஏனெனில், ஜனாதிபதி கோட்டபாயவின் முதல் தெரிவு, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவாகவே இருந்தது. ஆனால் சந்தர்பத்தை சரியாக கையாளுவதில் துரிதமாகவும் புத்திசாலித்தனமாகவும் பிரேமதாச செயற்பட்டிருக்கவில்லை. இந்த இடைவெளியைத்தான் ரணில் பயன்படுத்திக் கொண்டார்.

இன்றைய சூழலில் மக்களின் முதன்மையான பிரச்சினை பொருளாதார சுமைதான். இதனை சரிசெய்வதில் ரணில் வெற்றிபெறுவாராக இருந்தால், அவர் மீளவும் சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குள்ள ஒரு தலைவராக வந்துவிடலாம். ஆனால் ஆட்சி மாற்றத்தின் போது, ரணிலின் மீது வைத்திருந்த நம்பிக்கையை பாதுகாப்பதில் அவர் தோல்வியடைந்திருந்தார்.

ரணில்-மைத்திரி ஆட்சியின் தவறுகளும் ராஜபக்சக்களின் மீளெழுச்சிக்கு ஒரு பிரதான காரணமாகும். ஆட்சி மாற்றத்தின் தோல்வியே, இறுதியில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் சிதைவுக்கும் வழிவகுத்தது. எந்த ராஜபக்சக்களை வீழ்த்துவதற்காக ஆட்சி மாற்றம் ஏற்பட்டதோ, இறுதியில், ராஜபக்சக்களை பலப்படுத்துவதற்கே அது பயன்பட்டது. அந்த வகையில், ஆட்சி மாற்றத்தை தக்கவைப்பதில் ரணிலால் வெற்றிபெற முடியவில்லை.

ரணில் இன்றைய நெருக்கடி நிலையையை கையாளக் கூடியவரென்று கூறுவதற்கு பின்னாலிருக்கும் பிரதான காரணம், அவர் மேற்குலகிற்கு சார்பானவர் என்னும் பார்வையாகும். இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளில், அமெரிக்கா அதிக ஈடுபாடு காட்டியிருந்தது. இதற்கு, அமெரிக்காவின் அப்போதைய உதவி ராஜாங்கச் செயலர், ரிட்சர்ட் ஆமிட்ரேஜின் பிரத்தியோக ஈடுபாடும் ஒரு பிரதான காரணமாகும். இது பற்றி, அப்போது, இலங்கைக்கான, அமெரிக்க தூதுவராகவிருந்த ஜிப்ரி லுன்ஸ்டட் இவ்வாறு விபரிக்கின்றார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்கு கொண்டுவர வேண்டுமென்பதில் ரிச் சர்ட் ஆமிட்ரேஜ் பிரத்தியேக ஈடுபாடு காண்பித்திருந்தார். ஐக்கிய தேசியக் கட்சி, அடிப்படையில் மேற்குசார்பான கட்சி. உலகளாவிய கொன்சவர்டிவ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பில், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரு அங்கத் துவ கட்சி. இந்த

> தனது புத்திக் கூர்மை கொண்டு, தனக்கான ஆடுகளத்தை அவர் எப்போதுமே உருவாக்கிக் கொள்கின்றார். தெருச்சண்டியர்களான ராஜபக்சக்கள் தேற்றுப்போயிருக்கும் ஆடுகளத்தில், சிங்கமாகவும் நரியாகவும் மீண்டும் ரணில், களமிறங்கியிருக்கின்றார். ரணில் இதற்கு முன்னர் ஆடிய அரசியல் களங்களுக்கும் இதற்கும் அடிப்படையான வேறுபாடுண்டு. மீட்பர்கள் இல்லாத இடைவெளியில், தன்னால் மீட்க முடியுமென்னும் நம்பிக்கையோடு களமிறங்கியிருக்கின்றார்.

கூட்டமைப்பின் இணை நிறுவனர்களில், அப்போது அமெரிக்காவின் ஜனாபதியாக இருந்த, ஜோர்ஜ். எச். டயிள்யு.புஸ்சும் ஒருவராவார். அதே வேளை, அமெ ரிக்காவின் குடியரசு கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான நீண்டகால நெருக்கமிருந்தது. இப்படியான காரணங்களால், ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை பலப்படுத்த வேண்டுமென்பதில் ஆமிட்ரேஜ் பிரத்தியேக ஈடுபாடு காண்பித்திருந்தார்.

அன்றைய சூழலில், அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள வட்டாரத்தில், இலங்கைக்கான அதிகாரியென்று அழைக்கப்படுமளவிற்கு, ஆமிட்ரேஜ், இலங்கை விடயங்களில் பிரத்தியே ஈடுபாட்டை காண்பித்திருந்தார். ஆனால் ஆமிட்ரேஜின் பிரத்தியேக நகர்வையே விடுதலைப் புலிகள் தோற்கடித்திருந்தனர். மேற்குலகு விடுதலைப் புலிகளுக்கு எதிராக முற்றாக திரும்பிய இடமும் இதுதான்.

ரணில் விக்கிரமசிங்க மிகவும் புத்திக் கூர்மையுள்ளவராக இருந்த போதிலும் கூட, அவரால் நிறைவேற்றதிகார கதிரையை ஒரு முறை கூட தொட முடியவில்லை. 2005இல் விடுதலைப் புலிகளால் அந்த வாய்ப்பை இழந்து போனார். 2015இல், ஆட்சி மாற்றத்திற்கான பரந்த கூட்டணியொன்று உருவாக்ககப்பட்ட போதிலும் கூட, ரணிலுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை.

மைத்திரிபால சிறிசேனவிற்கு பின்னாலிருந்தே ரணில் செயற்பட வேண்டியேற்பட்டது. ஆட்சிமாற்றம், ரணில் விக்கிரமசிங்கவை மீளவும் அதிகாரமுள்ள பிரதமராக முன்னிறுத்திய போதிலும் கூட, ரணில்-மைத்திரி உள்-மோதல்களால், அவர், மீளவும் மக்கள் மத்தியில் அன்னியப்படக் கூடிய சூழலே உருவாகியது. சஜித் பிரேமதாசவின் பிளவால், இறுதியில் ஐக்கிய தேசியக் கட்சி முற்றிலுமாக சிதைந்தது. கிட்டத்தட்ட ரணில் விக்கிரமசிங்க காணாமல் போய்விட்டார் என்னும் நிலையிலிருந்துதான், அவர் தற்போது, மீளவும் பிரதமராகியிருக்கின்றார்.

எரிக் சொல்கெய்ம், சொல்வது போன்று, ரணில் விக்கிரமசிங்க ஒரு சிறந்த புத்திஜீவி ஆனால் தெருச் சண்டைக்காரரல்ல . அவரிடம் விரிவான பொருளாதார திட்டமிருந்தது. சிங்கப்பூர், தாய்வான் போன்று, இலங்கையையும் மாற்ற வேண்டுமென்று அவர் விரும்பினார். ஆனால், சிங்கள தெருச்சண்டித்தனத்திற்கு முன்னால் ரணிலின் புத்திக் கூர்மை வெற்றிபெறவில்லை. ரணிலால் மக்கள் செல்வாக்கு மிக்க தலைவராக ஒரு போதுமே நிமிரமுடியவில்லை.

ஆனாலும் தனது புத்திக் கூர்மை கொண்டு, தனக்கான ஆடுகளத்தை அவர் எப்போதுமே உருவாக்கிக் கொள்கின்றார். தெருச்சண்டியர்களான ராஜபக்சக்கள் தேற்றுப்போயிருக்கும் ஆடுகளத்தில், சிங்கமாகவும் நரியாகவும் மீண்டும் ரணில், களமிறங்கியிருக்கின்றார்.

ரணில் இதற்கு முன்னர் ஆடிய அரசியல் களங்களுக்கும் இதற்கும் அடிப்படையான வேறுபாடுண்டு. மீட்பர்கள் இல்லாத இடைவெளியில், தன்னால் மீட்க முடியுமென்னும் நம்பிக்கையோடு களமிறங்கியிருக்கின்றார். இது மிகவும் சிக்கலான சவால். இந்தச் சவாலில் ரணில் வெற்றிபெற்றால், அவர், மக்கள் மத்தியில் மறக்கமுடியாதவொரு தலைவராவார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஒரு விடயம் உண்மை. ரணில் இந்த ஆட்டத்தில் தோல்வியடையக் கூடாது. ஒரு வேளை ரணில் தோல்வியடைந்தால், நாடு மீள முடியாத நெருக்கடிக்குள் வீழ்வது நிச்சயம். மோசமான வனமுறையொன்றும் வெளிக்கிளம்பலாம்.



வரலாறு பல ஆச்சரியங்களை மறைத்து வைத்திருக்கும் ஆசானாகும். 2005இல், ரணிலின் தோல்விக்கு தமிழர்கள் காரணமானபோது, அது விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் பேரழிவை கொடுத்தது. இப்போது சிங்களவர்கள் ரணிலை தோற்கடித்தால், சிங்களவர்கள் பேரழிவை சந்திக்க நேரிடும். இப்போது ரணில் தமிழர்களுக்கு தேவையோ இல்லையோ ஆனால் நிச்சயம் சிங்களவர்களுக்கு தேவை. எனது கருத்தில் அவர் தமிழர்களுக்கும் தேவை தான்.

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**36)** பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

**37)** நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

**38)** தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

**39)** கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


**40)** இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

**41)** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

**42)** பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

**43)** கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

**44)** எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

**45)** 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

**46)** நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

**47)** மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

**48)** சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

**49)** எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

**50)** காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

**51)** பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

**52)** தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

**53)** மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

**54)** சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

**55)** பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

**56)** காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

**57)** கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஒரிகாமி 3) அலப்பறை

**58)** உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

**59)** குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல் **(30 புள்ளிகள்)**

**60)** பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | 3 | 37. | 1 | 38. | 1 |
| 39. | 2 | 40. | 3 | 41. | 3 |
| 42. | 1 | 43. | 3 | 44. | 3 |
| 45. | 2 | 46. | 3 | 47. | 2 |
| 48. | 2 | 49. | 3 | 50. | 2 |
| 51. | 3 | 52. | 3 | 53. | 3 |
| 54. | 3 | 55. | 2 | 56. | 3 |
| 57. | 2 | 58. | 2 | 59. | 3 |
| 60. | பொருத்தமான வாக்கியங்கள் | | | | |


கல்வி tv CHANNEL-1

**10.06.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**10.06.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கிழக்கு மாகாணத்தின் முதுகெலும்பே கலை!

## தர்மலிங்கம் சுரேஸ்



மட்டக்களப்பு, ஜூன். 10

வீரத்துக்கு பெயர் போன கிழக்கு மாகாணத்தின் முதுகெலும்பாக கலைத்துறையை பார்க்கலாம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

இலங்கையின் கராத்தே துறையின் முன்னோடிகளில் ஒரு வராகவும் இலங்கை கராத்தே சங்கத்தின் ஸ்தாபக தலைவர்களில் ஒருவருமான க.இராமச்சந்திரனின் 08ஆவது ஆண்டு நினைவு தினம் மட்டக்களப்பில் அனுஸ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பைச் சேர்ந்த சிகான் கணபதிப்பிள்ளை இராமச்சந்திரன் இலங்கை கராத்தே சங்கத்தை ஆரம்பிப்பதில் முன்னோடியாக இருந்ததுடன் அதன் தலைவராகயிருந்து இலங்கையில் கராத்தே வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளார்.

அத்துடன் வடக்கு-கிழக்கு மாகாணத்திலும் கராத்தே துறையில் பல சாதனைகளுக்கும் காரணமாகயிருந்தார்.

அவரை நினைவு கூரும் வகையிலான நிகழ்வு மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை ராம் கராத்தே சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் ஸ்தாபகரும் தலைவருமான பிரதம போதனாசிரியர் சிகான் கணபதிப்பிள்ளை குககுமாரராசா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ், வை.எம்.சி.ஏ.யின் பொதுச்செயலாளர் ஏ.ஜூலியன் உட்பட கராத்தே சங்க மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது உரிமைக்காக உயிர்நீர்த்தவர்களுக்காகவும் கராத்தே சங்கத்திலிருந்து உயிர்நீர்த்தவர்களுக்காகவும் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அமரர் சிகான் கணபதிப்பிள்ளை இராமச்சந்திரன் உருவப்படத்திற்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டு நினைவு அனுஸ்டிக்கப்பட்டது. (அ)

# காட்டு யானை தாக்கியதில் 4 மாத ஆண் குழந்தை பலி!

## அக்கரைப்பற்று பகுதியில் துயரம்

மட்டக்களப்பு, ஜூன். 10

**அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பள்ளக்காட்டு பகுதியில் காட்டு யானைத் தாக்கியதில் 4 மாதங்களேயான பச்சிளம் ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்ததாக பொலிஸ் தெரிவித்துள்ளது.**

நேற்று முன் தினம் மாலை குறித்த பகுதியில் உள்ள மரம் ஒன்றின் கீழ் குழந்தையை உறங்க வைத்து விட்டு அதன் பெற்றோர் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது அங்கு பிரவேசித்த காட்டு யானை குழந்தையை தாக்கியதில் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

உயிரிழந்த குழந்தையின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக அக்கரைப்பற்று ஆதர வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோவின் 34ஆவது ஆண்டு நினைவு மட்டக்களப்பில்



மட்டக்களப்பு, ஜூன். 10

மட்டக்களப்பு புனித மரியால் பேராலயத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட மனித உரிமைச் செயற்பாட்டாளர் அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோவின் 34ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று வியாழக்கிழமை மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

1988ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06ஆம் திகதி இந்திய இராணுவத்துடன் இணைந்து செயற்பட்ட ஆயுதக்குழு ஒன்றினால் மட்டக்களப்பு புனித மரியால் பேராலயத்தில் வைத்து அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ சுட்டுக்கொல்லப்பட்டார்.

அன்னாரது சமாதியானது புனித மரியால் பேராலயத்தில் அமைக்கப்பட்டுள்ளதுடன் அதில் நேற்று நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் ஏற்பாட்டிலும் எகட் கரித்தாஸின் அனுசரணையுடனும் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் தலைவர் அருட்தந்தை ஜெகதாஸ் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் அருட்தந்தை எ.தேவ தாசன் அடிகளார் மற்றும் எகட் கரித்தாஸின் இயக்குனர் அருட்தந்தை ஏ.ஜேசுதாசன் மற்றும் அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோவின் சகோதரர்கள், உறவினர்கள்,பல்சமய ஒன்றிய பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர். இதன்போது சமாதியில் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அன்னாரின் திருவுருவப்படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அஞ்சலி உரைகளும் நடைபெற்றன. (அ)

# நியமனக்கடிதங்கள் வழங்கல்

அம்பாறை, ஜூன். 10

ஜனாதிபதி கோட்டாபயவின் எண்ணத்தில் உருவான பலநோக்கு அபிவிருத்திச் செயலணி திணைக்களத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைய காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜனின் வழிகட்டலின் கீழ் காரைதீவு பிரதேச பலநோக்கு அபிவிருத்தி உதவியா ளர்களுக்கான நியமனக்கடிதங்கள் அண்மையில் காரைதீவு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இதன் போது பலநோக்கு அபிவிருத்திச் செயலணி திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (அ)



# பணம் மோசடி செய்தவர் கைதாகி விளக்கமறியலில்

மட்டக்களப்பு ஓட்டுமாவடியிலுள்ள கம்பனி ஒன்றில் 44 இலட்சம் ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டில், மாவட்ட விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால்கைது செய்யப்பட்ட அதன் முகாமையாளரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த கம்பனியில் கடமையாற்றி வந்த முகாமையாளர் அந்த கம்பனியின் 44 இலட்சத்து 67 ஆயிரத்து 353 ரூபாவை மோசடி செய்துள்ளதாக அந்த கம்பனி உரிமையாளர் குறித்த நபருக்கு எதிராக, மாவட்ட விசேட குற்றப் புலனாய்வு பிரிவுக்கு முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து, குறித்த நபரை கைது செய்து மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோது, இவரை எதிர்வரும் 13 ஆம் திதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ)

# வறுமையான குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கல்

திருமலை, ஜூன் 10

குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்களில் வாழ்கின்ற வறிய குடும்பங்களுக்கு தவிசாளர் ஏ.முபாறக்கினால் இலவசமாக மண்ணெண்ணை வழங்கி வைக்கும் நிகழ்வு புல்மோட்டை உபபிரதேச சபைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.



இதன்போது தவிசாளர் ஏ.முபாறக், புல்மோட்டை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி, புல்மோட் டைப் பிரதேச இராணுவ பதில் பொறுப்பதிகாரி, புல்மோட்டை ஜம்மியத்துல் உலமா சபையின் செயலாளர் ஆகியோரினால் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. (அ)

# தென்கிழக்குப் பல்கலையில் ஞாயிறன்று இதழியல் டிப்ளோமா சான்றிதழ் வழங்கல்

அம்பாறை, ஜூன். 10

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் கடந்த 2017ஃ18 ஆம் ஆண்டுக்கான இதழியல் டிப்ளோமா பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குறித்த பயிற்சி நெறி, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் மற்றும் கொரோனா நோய்த் தொற்று காரணமாக சில வருடங்கள் காலதாமதமானதுடன், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கடந்த வருடம் இதற்கான இறுதிப் பரீட்சை இடம்பெற்றிருந்தது.

இதில் 41 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன், அந்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வே இவ்வாறு இடம்பெறவுள்ளது.

(அ)

# உக்ரைன் தானியங்களை திருடி ஏற்றுமதி செய்கின்றது ரஷ்யா!

## அதிகாரிகள் குற்றச்சாட்டு

**கீவ், ஜூன்.10**

**உக்ரைனிய தானியங்களை திருடி ரஷ்யா வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாக, உக்ரைனிய அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.**



ரஷ்யா தனது 600,000 தொன் தானியங்களை திருடி அதில் சிலவற்றை ஏற்றுமதி செய்ததாக உக்ரைன் அதிகாரிகள் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

திருடப்பட்ட உக்ரைன் கோதுமையை ஆபிரிக்காவில் வறட்சியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு விற்க ரஷ்யா முயற்சிப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டுவதாக நியூயோர்க் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

மே மாதத்தின் நடுப்பகுதியில், பெரும்பாலும் ஆபிரிக்காவில் உள்ள 14 நாடுகளுக்கு, ரஷ்ய சரக்குக் கப்பல்கள் உக்ரைனுக்கு அருகே உள்ள துறைமுகங் களில் இருந்து தானியங்களை ஏற்றிச் சென்றதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, உக்ரைனில் இருந்து தானியங்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதை ஆக்கிரமிக்கப்பட்ட தெற்கு உக்ரைனில் ரஷ்யாவால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஆனால், உக்ரைனால் தானியங்களைத் திருடுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்துள்ளது.

ரஷ்யாவின் கடற்படை, உக்ரைனின் கருங்கடல் துறைமுகங்களை முற்றுகையிட்டதால் ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஆண்டுதோறும் அனுப்பப்படும் மில்லியன் கணக்கான தொன்கள் ஏற்றுமதி முடங்கி போயுள்ளது.

ஆனால், ரஷ்யா, உக்ரைன் கருங்கடல் கரையோரத்தில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றி, தானியங்களை ஏற்றுமதி செய்வதற்கான வழித்தடங்களை செயற்படுத்த வேண்டுமென கூறுகின்றது. (அ)

# பேர்ளினில் பாதசாரிகள் மீது காரை செலுத்திய நபர் கைது

## ஒருவர் பலி! பலர் படுகாயம்!



பேர்ளின், ஜூன். 10

ஜேர்மனியின் தலைநகர் பேர்ளினில் நேற்று முன் தினம் முற்பகல் பாதசாரிகள் மீது கார் மோதியதில் குறைந்தது ஒருவர் உயிரிழந்துள்ளார். டசின் கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

பேர்ளின் நகரில் முற்பகல் 10.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அது ஒரு விபத்தா அல்லது திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதலா என்பது உடனடியாகத் தெரிய வரவில்லை எனப் பொலிஸார் கூறியுள்ளனர். பொது மக்கள் மீது சில்வர் ரெனோல்ட் செலியோ ரக காரைச் செலுத்திய நபர் பின்னர் அதனைக் கைவிட்டுத் தப்பிச் செல்ல முயன்றுள்ளார். அங்கு நின்றவர்கள் அவரை மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சம்பவம் நடந்த பகுதிக்கு வந்த பெரும் எண்ணிக்கையான பொலீஸாரும் மீட்புப் படையினரும் காயமடைந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். படுகாயமடைந்தவர்கள் ஹெலிக்கொப்ரர் மூலம் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

இன்றைய சம்பவம் நடைபெற்ற அதே பகுதியில் 2016 ஆம் ஆண்டு நத்தார் சந்தை ஒன்றில் வாகனத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. வாகனம் ஒன்றின் சாரதியைக் கொன்றுவிட்டு அதனைச் செலுத்தச் சென்ற இஸ்லாமியத் தீவிரவாதி ஒருவர், அதனைப் பொது மக்கள் மீது மோதித் தாக்கியிருந்தார். அன்றைய சம்பவத்தில் 11 பேர் உயிரிழந்தனர். (அ)

# ருவிட்டரை எலான் மஸ்கிற்கு விற்பது குறித்து வாக்கெடுப்பு

லண்டன், ஜூன். 10

ருவிட்டர் நிறுவனத்தை 44 பில்லியன் டொலர் தொகைக்கு தொழிலதிபர் எலான் மஸ்கிடம் விற்பது குறித்து ஓகஸ்ட் தொடக்கத்தில் பங்குதாரர்களிடம் வாக்கெடுப்பு நடத்த திட்டமிட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஸ்பேம் மற்றும் போலிக் கணக்குகள் குறித்த தரவுகளை தராததை அடுத்து ட்விட்டரை வாங்கும் ஒப்பந்தத்தை கைவிட உள்ளதாக எலான் மஸ்க் எச்சரித்தார்.

இதையடுத்து எலான் மஸ்கிடம் தொடர்ந்து தகவல்களை பகிர்ந்து கொள்வதாக ருவிட்டர் தெரிவித்துள்ளது. (அ)



# அணு ஆயுத பொருட்கள் ஏற்றிச்சென்ற அமெரிக்க இராணுவ விமானம் விபத்து!

கலிபோர்னியா, ஜூன். 10

அணு ஆயுத பொருட்களை ஏற்றிச் சென்ற அமெரிக்க இராணுவ விமானம் விபத்துக்குள்ளானதில் 4 வீரர்கள் உயிரிழந்தனர்.

போயிங் வகை போர் விமானம் அணு ஆயுத பொருட்களை ஏற்றிச் சென்ற போது கலிபோர்னியா அருகே விபத்துக்குள்ளானதாக கூறப்படுகிறது.

விமானத்தில் பயணித்த 4 வீரர்களின் சடலம் கண்டெடுக்கப்பட்ட நிலையில், 5ஆவது வீரரை தேடும் பணி முடுக்கிவிடப்பட்டு உள்ளது.



விபத்துக்கான காரணம் குறித்து இராணுவ அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# 1572 மீற்றர் பள்ளத்தில் வான் விழுந்து விபத்து

## பாகிஸ்தானில் 22 பேர் உயிரிழந்தனர்

லாகூர், ஜூன் 10

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் கட்டுப்பாட்டை இழந்த வான் வீதியோர பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 22 பேர் உயிரிழந்தனர்.

பலுசிஸ்தானின் லோராலியாவில் இருந்து சோப் நகருக்கு பயணிகளை ஏற்றிக் கொண்டு வான் ஒன்று புறப்பட்டு சென்றது.

அக்தர்சாய் மலைப்பகுதியில் உள்ள வளைவில் திரும்பும் போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த வான், 1,572 மீற்றர் உயர மலை வீதியில் இருந்து பள்ளத்தில் உருண்டு விழுந்தது.

இந்த கோர விபத்தில் வானில் பயணித்த 22 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர்.

# வீட்டில் கஞ்சாவை வளர்த்து விற்க தாய்லாந்து அனுமதி!

பாங்கொக், ஜூன். 10

தாய்லாந்தில் தடைசெய்யப்பட்ட போதைப்பொருள் பட்டியலில் இருந்து கஞ்சாவை நீக்கிய பிறகு, தாய்லாந்தில் உள்ளவர்கள் இப்போது வீட்டில் கஞ்சா செடிகளை வளர்த்து அந்த பயிரை விற்கலாம்.

தென்கிழக்கு ஆசியாவில், கடுமையான போதைப்பொருள் சட்டங்களுக்கு பெயர் பெற்ற நாடு, அத்தகைய நடவடிக்கையை முதன்முதலில் முன்னெடுத்த நாடாக மாறியுள்ளது. எனினும், பொழுதுபோக்கு பயன்பாடு இன்னும் தடை செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர் கஞ்சா வர்த்தகத்தை வளர்ப்பது விவசாயம் மற்றும் சுற்றுலாவை மேம்படுத்தும் என்று தாய்லாந்து அரசாங்கம் நம்புகிறது. இது குடிமக்களுக்கு ஒரு மில்லியன் கஞ்சா நாற்றுகளை வழங்குவதை ஊக்குவிக்கிறது.



'கஞ்சா மற்றும் கஞ்சா தொழிற்துறை மூலம் மக்கள் மற்றும் அரசாங்கம் வருமானம் ஈட்ட இது ஒரு வாய்ப்பு' என்று துணைப் பிரதமரும் சுகாதார அமைச்சருமான அனுடின் சார்ன்விரகுல் கடந்த மாதம் தனது சமூக ஊடக பக்கத்தில் குறிப்பிட்டார்.

உணவகங்களில் சாப்பிடுபவர்கள் கஞ்சா கலந்த உணவுகள் மற்றும் பானங்களை பெற்றுக் கொள்ளலாம்.முக்கியமாக உணவு தயாரிப்புகளில் டெட்ராஹைட் ரோகன்னா பினோல் 0.2 சதவீதம் குறைவாக இருக்க வேண்டும். வியாழன் முதல், குடும்பங்கள் அதிகாரிகளிடம் பதிவு செய்தால், ஆறு கஞ்சா பானை செடிகளை வீட்டில் வளர்க்க முடியும். மேலும் நிறுவனங் களும் அனுமதியுடன் ஆலையை தொடரலாம்

நாடு முழுவதும் உள்ள சுகாதார சேவை நிலையங்கள், கஞ்சாவை ஒரு சிகிச்சையாக மிகவும் சுதந்திரமாக வழங்க முடியும். 2018ஆம் ஆண்டில் மருத்துவ கஞ்சா பயன்பாட்டை சட்டப்பூர்வமாக்கிய ஆசியாவிலேயே தாய் லாந்து முதல் இடத்தில் உள்ளது.

இருப்பினும், தனிப்பட்ட பயன்பாட்டிற்கு மருந்தைப் பயன்படுத்துவது இன்னும் சட்ட விரோதமானது. பொது இடங்களில் புகைபிடிப் பதற்கு எதிராக அதிகாரிகள் மக்களை எச்சரித்துள்ளனர். இது பொதுத் தொல்லையாகக் கருதப்படுவதாகவும், குற்றவாளிகள் கைது செய் யப்படும் அபாயம் இருப்பதாகவும் அவர்கள் கூறினர். (அ)


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி


கொழும்பு இந்துக் கல்லூரி

# இந்துக்களின் போர் துடுப்பாட்டம் இன்று யாழ். இந்துவில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 10

இந்துக்களின் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - கொழும்பு இந்துக் கல்லூரி அணிகள் மோதும் பெருந் துடுப்பாட்ட போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

11 ஆவது தடவையாக இரு கல்லூரிகளும் மோதும் இந்தப் போட்டி இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

1982ஆம் ஆண்டு முதன் முறையாக ஆரம்பிக்கப்பட்ட இந்துக்களின் மாபெரும் போர், முதன்முறையாக இந்துக் கல்லூரி - கொழும்பு மைதானத்தில் இடம்பெற்றிருந்தது.

இரண்டாவது போட்டி 1983 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றிருந்தது. இறுதியாக, கடந்த 2019 இல் சரவணமுத்து சர்வதேச மைதானத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் கொழும்பு இந்துக் கல்லூரி வெற்றி பெற்றிருந்தது.

பின்னர் அசாதாரண சூழ்நிலைகளால் கடந்த இரண்டு வருடமாக தடைப்பட்டிருந்த இந்தப் போட்டியானது மீண்டும் இந்த வருடம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.

முன்னதாக நடந்து முடிந்த 10 போட்டிகளில் நான்கில் கொழும்பு இந்துக் கல்லூரியும் ஒரு போட்டியில் யாழ். இந்துக் கல்லூரியும் வென்றுள்ளன. ஏனைய ஐந்து போட்டிகளும் சமநிலையில் முடிவடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கையுடனான ரி-20; தொடர் ஆஸி. வசமானது



கொழும்பு, ஜூன் 10

இலங்கைக்கு எதிரான இரண்டாவது இருபது -20 போட்டியிலும் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரைக் கைப்பற்றியது. நேற்று முன்தினம் இரவு நடந்த இந்தப் போட்டியில் 3 விக்கெட்களால் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது.

இலங்கை வந்துள்ள அவுஸ்திரேலிய அணி தற்போது 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடி வருகின்றது. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனால், முதலில் ஆடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்கள் இழப்புக்க 124 ஓட்டங்களை எடுத்திருந்தது. 125 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கைத் துரத்திய அவுஸ்திரே லிய அணிக்கு இலங்கையின் பந்துவீச்சாளர்கள் நெருக்கடியை கொடுத்தார்கள். எனினும், 17.5 ஓவர்களில் 7 விக்கெட்களை மாத்திரம் இழந்து அவுஸ்திரேலிய அணி வெற்றியைப் பெற்றது.

அவுஸ்திரேலிய அணிக்கு தொடக்கம் கொடுத்த பின்ஞ்சும் டேவிட் வோர்ணரும் அதிரடியாக ஆட்டத்தை ஆரம்பித்தனர். இருவரும் வேகமாக ஓட்டங்களை குவிக்க முற்பட்டமையால் விரைவாகவே விக்கெட்களையும் இழந்தனர். பின்ஞ் 13 பந்துகளில் 24 ஓட்டங்களையும், வோர்ணர் 10 பந்துகளில் 21 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அதன் பின்னர் வந்த மார்ஷ் 11, ஸ்ரீவன் ஸ்மித் 5, என ஆட்டமிழக்கவே மக்ஸ்வெல் சற்று நிதானமாக ஆடினார். எனினும் அவரும் 19 ஓட்டங்களில் நடையைக் கட்டினார்.

இதைத் தொடர்ந்து, போட்டியில் இலங்கையின் கை ஓங்கியது. ஆனாலும், 7ஆவது வீரராகக் களமிறங்கிய மத்தியூ வேட் பொறுப்பாக ஆடினார். அவருக்கு ஜெய் றிச்சர்ட்சன் துணையாக நிற்கவே இருவரும் இணைந்து ஆஸி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

இறுதிவரை ஆட்டமிழக்காது வேட் 26 ஓட்டங்களையும், றிச்சர்ட்சன் 9 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கையின் பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க 4 விக்கெட்களையும், துஷ்மந்த சாமீர, நுவான் துஷார ஆகியோர் ஒவ்வொரு விக்கெட் டையும் வீழ்த்தினர்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு தொடக்கம் கொடுத்த பதும் நிஸங்க (3) , தனுஷ்க குணதிலக (4) சொற்ப ஓட்டங்களுடனேயே ஆட்டமிழந்தனர்.

மூன்றாவது விக்கெட்டுக்கா இணைந்த சரித் அசலங்க, குசல் மெண்டிஸ் ஆகியோர் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருவரும் இணைந்து ஏற்படுத்திய இணைப்பாட்டத்தால் இலங்கை அணி ஓரளவுக்கு ஓட்டங்களை குவிக்க முனைந்தது. எனினும், அசலங்க 39 ஓட்டங்களுடனும், மெண்டிஸ் 36 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

எனினும், அடுத்து வந்த வீரர்கள் இத்தகையதோர் இணைப்பாட்டத்தை ஏற்படுத்தத் தவறினர். இதன் விளைவால் 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 124 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றது.

ஆஸியின் பந்துவீச்சில் கேன் றிச்சர்ட்சன் 4, ஜெய் றிச்சர்ட்சன் 3, மக்ஸ்வெல் 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் 2 - 0 என்ற அடிப்படையில் தொடர் அவுஸ்திரேலியா வசமானது. போட்டியின் நாயகனாக வேட் தெரிவானார். (ஐ)



# பாபர் அஸாம் புதிய சாதனை

முல்தான், ஜூன் 10

13 ஒருநாள் போட்டிகளில் 1000 ஓட்டங்களை கடந்த அணித் தலைவர் என்ற சாதனையை பாகிஸ்தானின் பாபர் அஸாம் படைத்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. பாகிஸ்தானில் நடக்கும் இந்தப் போட்டியில் 50 ஓவர்களில் 305 ஓட்டங்களை மேற்கிந்தியத் தீவுகள் பெற்றிருந்தது.

இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணிக்கு அதன் தலைவர் 103 ஓட்டங்களை எடுத்தார். அந்த சதத்தின் உதவியுடன் பாகிஸ்தான் 49.2ஆவது ஓவரில் 5 விக்கெட்களை இழந்து வெற்றிபெற்றது.

இந்தப் போட்டியில் சதம் அடித்ததன் மூலம் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் 2 முறை ஹட்ரிக் சதங்களை அடித்த முதல் வீரர் என்ற உலக சாதனையை பாபர் அசாம் படைத்துள்ளார்.

கடந்த 2016ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் பாபர் அசாம் தொடர்ச்சியாக 3 சதங்கள் அடித்து இருந்தார். இந்த சாதனை மட்டுமின்றி அவர் விராட் கோலியின் சாதனை ஒன்றையும் அவர் தகர்த்துள்ளார். ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அணித் தலைவராக அதிவேகமாக 1000 ஓட்டங்களைக் கடந்தவர் என்ற பெருமையை பாபர் அசாம் பெற்றுள்ளார். அவர் இந்த சாதனையை 13 இனிங்ஸ்களில் படைத்துள்ளார். இதற்கு முன் விராட் கோலி இந்திய அணியின் தலைவராக 17 இனிங்ஸ்களில் 1000 ஓட்டங்களை கடந்ததே சாதனையாக இருந்தது.

இதுவரை 87 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள பாபர் அசாம் 17 சதங்கள் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வடக்கு-கிழக்கில் நல்லாட்சி ஆரம்பித்த வீடுகளை நிர்மாணித்துத் தரவேண்டும்

## சாணக்கியன் எம்.பி. சபையில் கோரிக்கை

**கொழும்பு, ஜூன் 10**

**வடக்கு, கிழக்கில், நல்லாட்சி அரசில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை நிர்மாணித்துத் தரவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கோரிக்கை விடுத்தார்.**

பாராளுமன்றில் இன்று இது தொடர்பில் கேள்வி எழுப்பிய அவர், "நல்லாட்சி அரசில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை, தாம் பூர்த்தி செய்யமுடியாது என்று அரசின் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்" என்று குறிப்பிட்டார்.

எனினும், இதற்குப் பதிலளித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, "நல்லாட்சி அரசின் காலத்தைக் காட்டிலும் தற்போதைய அரசு கடன் அடிப்படையில் அதிக எண்ணிக்கையிலான வீடுகளை அமைத்துக்கொடுத்துள்ளது" என்று தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட சாணக்கியன் எம்.பி., "இந்த வீடுகளுக்கு ஒரு இலட்சம் ரூபா மாத்திரமே கடன் வழங்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு வீடுகளை அமைக்கமுடியுமா?" என்றும் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த வீடமைப்புத்துறையின் முன்னாள் பிரதி அமைச்சர், "குறித்த வீடுகளுக்கு 6 இலட்சம் ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளது" என்று சுட்டிக்காட்டினார். எனினும், வழங்கப்பட்ட தகவல்கள் யாவும் பொய்யா னவை என்று சாணக்கியன் எம்.பி. தெரிவித்தார். (அ)



# மண்ணெண்ணெய் வழங்குமாறு மஸ்கெலியாவில் ஆர்ப்பாட்டம்

*கொழும்பு, ஜூன் 10*

மண்ணெண்ணெய் வழங்குமாறு கோரி மஸ்கெலியா எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக மஸ்கெலியா பிரதேச மக்கள் பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கடந்த மூன்று கிழமையாக மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் நேற்று மண்ணெண்ணெய் கிடைக்கும் என மக்கள் எதிர்பார்ப்புடன் வருகை தந்த நிலையில், நேற்று மண்ணெண்ணெய் வரவில்லை என எரிபொருள் நிலைய ஊழியர்களால் தெரிவிக்கப்பட்டதையடுத்து, ஆவேசமடைந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

மண்ணெண்ணெய் விநியோகம் செய்வதற்கு முறையான திட்டம் ஒன்றை ஏற்படுத்தக் கோரி நேற்று காலை முதல் மண்ணெண்ணெய்க்காக வரிசையில் நின்ற சுமார் 500ற்கும் மேற்பட்ட மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் காரணமாக போக்குவரத்தும் ஸ்தம்பிதமாகியிருந்தது. (அ)

# அமைச்சரவை கூட்டத்தில் மகிந்த பங்கேற்கவில்லை

## பந்துலவுக்கு நாமல் பதில்

*கொழும்பு, ஜூன் 10*

பிரதமர் பதவியை மகிந்த ராஜபக்ஷ இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, எந்த அமைச்சரவைக் கூட்டங்களிலும் அவர் கலந்து கொள்ளவில்லை என முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில். இந்த விடயம் குறித்து ருவிட்டரில் பதிவிட்டுள்ள நாமல், அமைச்சரவைக் கூட்டங்களில் அவர் கலந்துகொள்ளவில்லை என்றும் அவ்வாறு அவர் கலந்து கொள்வார் என்று தான் நம்பவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும் அவர் எபபோதும் நாட்டின் ஜனநாயக அமைப்பின் மீது உறுதியான நம்பிக்கை கொண்டவர் என்பதோடு, எப்போதும் அதை மதிப்பவர் என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

# 119 இளைஞர்கள் கொரியா பயணம்

*கொழும்பு, ஜூன் 10*

மேலும் 119 இலங்கை இளைஞர்கள் வேலைவாய்ப்புகளுக்காக கொரியா பயணமாகினர்.

அடுத்த ஆறு மாதங்களில், கடந்த இரண்டு ஆண்டுகளாக தகுதி பெற்ற கொரிய வேலை வாய்ப்பை எதிர்பார்த்துள்ள சுமார் 5,800 பேர் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர்.

அவர்களை விரைவில் பணிக்கு அனுப்புவதற்கான சாத்தியப்பாடு குறித்து, கொரிய மனிதவள திணைக்களத்திற்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கும் இடையில் ஏற்கனவே இணக்கம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த குழுவினர் விரைவில் வெளிநாட்டுக்கு அனுப்பப்படுவர் என எதிர்பார்க்கப்படுவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரிய வேலைவாய்ப்புக்காக நாட்டை விட்டு வெளியேறிய குழுவினரை அனுப்பி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, புலம்பெயர் பணியாளர்கள் சரியான வங்கி முறையின் மூலம் தமது வருமானத்தை நாட்டுக்கு அனுப்பினால், தற்போதுள்ள எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கான வரிசைகளை நீக்கி, மருந்து பற்றாக்குறையையும் இல்லாமலாக்க முடியும் என தெரிவித்தார்.

கொரிய வேலைகளுக்காக புறப்படும் பணியாளர்களை வழியனுப்ப விமான நிலையத்துக்கு சென்ற அமைச்சர் மனுஷ நாணயக்கார, அவர்களுடன் கருத்துக்களை பரிமாறிக் கொண்டார். (அ)

வீட்டுத் தோட்டம் செய்வோம்



வளம் கொழிக்கும் பூமி என
வரலாற்றின் அத்தனை பக்கங்களிலும்
பெயர் பொறித்த நம் தாய்நாடு.
இன்று அடிப்படைத் தேவைகளுக்காகவும்
உணவுக்காகவும் கை ஏந்த ஆரம்பித்திருக்கிறது.
மூன்று வேளை உணவு இருவேளையாகவும்
ஒரு நேரமாகவும் சுருங்கியிருக்கிறது.
பஞ்சமும் பட்டினியும் கண்முன்னே
நிழலாடுகின்றன...!

போதும்...! ஏந்திய கைகள்
சற்றே உயரட்டும்

நாம் வாழப்போதுமான வளத்தை தன்னுள் வைத்திருக்கிறது நமது தாய்மண்!
வீட்டுக்கொரு தோட்டம் செய்வோம்
நமது பசியை நாமே போக்க...
எமது கைகளை சற்றே உயர்த்துவோம்!
பெரிதோ சிறிதோ... அவரவர் வீட்டுத் தேவைக்கு
போதுமான காய்கறிகளை நம் வீட்டிலேயே உற்பத்தி செய்வோம்...!
திட்டமிடலும் உழைப்புமே
நம்மையும் நம் நாட்டையும் காக்கும்!

DAN TELEVISION
www.dantv.tv

ஈழநாடு
Eelanadu

## பதவி விலகுவேன்...

வுக்கு பஸில் ராஜபக்ஷவின் பாராளு மன்றத்தின் தேசிய பட்டியல் ஆசனத்தை வழங்குவதற்கு பிரதமர் ரணில் விக்கிரம சிங்க எதிர்ப்பு தெரிவித்துள்ளார் என்று சிங்கள இணையத்தளம் செய்தி வெளி யிட்டுள்ளது.

தம்மிகவுக்கு பொருளாதாரம் தொடர் பான அமைச்சுப் பதவி வழங்க வேண்டி வரும் என்பதனாலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது எதிர்ப்பைத் தெரிவித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், ரணிலுக்கு பதிலளித்த கோட்டாபய ராஜபக்ஷ, 20ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ்தான் உங்களை பிரதமராக நியமித்துள்ளேன் என்பதனை நினைவில் வைத்திருங்கள் என்று எச் சரிக்கை விடுத்ததாக கூறப்படுகின்றது.

இதேபோன்று, கோட்டாபய ராஜ பக்ஷவை கடந்த வாரம் சந்தித்த ரணில் விக்கிரமசிங்க, மத்திய வங்கியின் ஆளு நராக தினேஷ் வீரக்கொடியை நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்த போது அதற்கு கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக மறுப்பு தெரிவித்தார் என்று கூறப்படுகின்றது.

இதையடுத்து, பிரதமர் பதவியில் இருந்து தான் விலகுகிறேன் என்று கோட்டாபாய ராஜபக்ஷவிடம் ரணில் தெரிவித்தபோது தாராளமாக பதவி விலகலாம் என்று கூறினார் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## பதவியை...

செய்யும் வகையில் 21ஆம் திருத்தச் சட்டம் கொண்டுவரப்படவுள்ள நிலை யிலேயே அவர் பதவி துறந்தார் என்று கூறப்படுகின்றது.

பஸில் ராஜபக்ஷ பதவி விலகியமை யைத் தொடர்ந்து நேற்றைய தினம் தனது கட்சி அலுவலகத்தில் செய்தி யாளர் சந்திப்பு ஒன்றையும் நடத்தியி ருந்தார்.

இந்நிலையில், பஸில் ராஜபக்ஷவை தொடர்ந்து 10 பாராளுமன்ற உறுப்பி னர்கள் பதவி விலகவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வாறு பதவி விலகும் அனைவரும் பஸில் ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர்கள் என்றும் இவர்களில், சாகர காரியவசம், ஜயந்த கொட்டேகொட மற்றும் பேரா சிரியர் ரஞ்சித் பண்டார ஆகியோர் உள்ளனர் எனவும் பிரபல சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளி யிட்டுள்ளது. (ஐ)

## 'கப்புடா' சர்ச்சை...

சமூகவலைத்தளங்களில் பிரபலமானது டன், அவரை கபுட்டா என்று கேலி செய்தும் வந்தனர். அரசுக்கு எதிரான போராட்டக்களங்களில்கூட கபுட்டா என்று அவர் கேலி செய்யப்பட்டிருந் தார்.

இந்நிலையில், பாராளுமன்ற உறுப் புரிமையை இராஜினாமா செய்தமை தொடர்பில் அவர் விளக்கமளிக்க ஊடக சந்திப்பு ஒன்றை அவர் நடத்தினார். இதன் போது செய்தியாளர் ஒருவர் அவரிடம் ஆங்கிலத்தில் வினா ஒன்றை எழுப்பி னார்.

இதற்கு ஆங்கிலத்தில் பதிலளித்த பஸில் ராஜபக்ஷ சிறிது நேரத்திலேயே நிறுத்திவிட்டு,

சுதாகரித்துக்கொண்ட அவர், "ஏற் கனவே, 'கபுட்டா' சர்ச்சையில் சிக்கியுள் ளேன். தெரிந்த மொழியிலேயே கதைக் கின்றேன்" என்ற புன்னகையுடன் குறிப்பிட்டு உரையைத் தொடர்ந்தார்.

இதேசமயம், இவரை கேலி செய்யும் முகமாக "கப்புட்டா கா... கா... பஸில்" என்ற பாடலும் இயற்றப்பட்டிருந்தது. இந்தப் பாடல் பலரின் கைபேசி ரிங் ரோனாக (Ringtone) உள்ளது. இந்நிலை யில், தனது கைபேசி ரிங்டோன்கூட அதுதான் என்றும் இதன்போது பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டார். (ஐ)

## இலங்கை...

தாபிமான அபிவிருத்தி சகாக்கள் 57 இலட் சம் மக்களுக்கு உடனடி உயிர்காக்கும் உதவி தேவைப்படுகின்றது என மதிப் பிட்டுள்ளனர். இலங்கையின் உணவுப் பாதுகாப்புக்கு பல விடயங்கள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. நாங்கள் தற்போது நடவடிக்கை எடுக்காவிட்டால் பல குடும்பங்களால் அடிப்படை உண வுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடி யாமல் போகும் என இலங்கைக்கான ஐநாவின் வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் பிற்பகுதியில் மனி தாபிமான நெருக்கடி ஏற்படுவதைத் தடுப்பதற்கு அவசர நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அபிவிருத்தி மற்றும் சமூக, பொருளாதார விடயங்கள் குறித் தும் கவனம் செலுத்தவேண்டும் - என் றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஒரு காலத்தில் மிகவும் வலுவானதாக காணப்பட்ட இலங்கையின் சுகாதார துறை நெருக்கடியில் சிக்குண்டுள்ளது. வாழ்வாதாரம் நெருக்கடிக்கு உள்ளாகி யுள்ளது. மோசமாக பாதிக்கப்படக் கூடிய நிலையில் உள்ளவர்கள் அதிக தாக்கத்தை எதிர்கொள்கின்றனர்.

இலங்கை மக்களுக்கான தனது ஆதரவை சர்வதேச சமூகம் வெளிப் படுத்தவேண்டிய தருணம் இது என ஐ. நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

ஐ. நா. மற்றும் மனிதாபிமான சகாக் கள், உதவி வழங்கும் சமூகத்தினர், தனி யார் துறையினர், தனிநபர்கள் இலங்கை யில் நெருக்கடியால் அதிகளவு பாதிக்கப் பட்ட பெண்கள் - குழந்தைகள் - ஆண் களுக்கு உயிர்காக்கும் உதவிகளை வழங் குவதற்காக இந்த திட்டத்துக்கு ஆத ரவை வழங்கவேண்டும் என்றும் இதன் மூலம் இலங்கையில் மனிதாபிமான நெருக்கடியை தவிர்க்கலாம் என்றும் ஐ. நா. வதிவிடப்பிரதிநிதி தெரிவித்தார்.

இலங்கையின் 2 கோடியே 20 இலட் சம் சனத்தொகையில் ஐம்பது இலட்சம் மக்கள் உணவு உதவி தேவைப்படும் நிலையில் உள்ளனர்.

சமீபத்தைய ஆய்வுகள் 86 வீதமான வீடுகள் உணவு உண்பதை குறைப்பது போன்றவற்றை பின்பற்றுவதை வெளிப் படுத்தியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட் டது. (ஐ)

## மது விருந்தில்...

துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை சம்பவத்தில் உயிரிழந்த வரின் சடலம் வவுனியா மாவட்ட மருத் துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசா ரணைகளை மல்லாவி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

## தொடருந்துடன்...

ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விபத்துக்கு உள்ளான கார் தென்னி லங்கை பதிவை கொண்டது. கார் தொடருந்தின் கீழ் அகப்பட்டமையால் உயிரிழந்தவர்களை உடனடியாக மீட்க முடியவில்லை. தவிர இறந்தவர்களின் விவரங்களும் உடனடியாகத் தெரியவர வில்லை. (ஐ)

## 21 ஐ...

வேண்டியது யாரென தெரியவில்லை. தற்போதைய சூழ்நிலையில் சிறு அளவி லான திருத்தங்கள் தேவையில்லை. முழு மையான அரசமைப்பு மறுசீரமைப்பே அவசியம்." எனவும் பஸில் குறிப்பிட்டார்.

அதேவேளை, தேர்தலை எதிர்கொள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தயாரெனவும் அவர் அறிவித்தார். (அ)

## முகக் கவசம்...

பட்டவர்கள் முகக்கவசம் அணிவது பொருத்தமானது என்று தெரிவிக்கப் பட்டது.

தவிர, இன்று முதல் பி.சி.ஆர். - ரெபிட் அன்ரிஜென் பரிசோதனையும் அவசிய மில்லை என சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ஐ)

# 3நேர உணவு பெற முடியாத நிலையில் 60 சதவீத மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்!

கொழும்பு, ஜூன் 10

நாட்டில் 60 சதவீத மான மக்கள் மூன்று வேளை உணவைப் பெற முடி யாத நிலைக்கு தள் ளப்பட்டுள்ளனர் என்று நுகர்வோர் உரிமைகளை பாது காப்பதற்கான அமைப்பின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் உணவுப் பஞ்சத்தை எதிர் கொண்டுள்ள நிலையில் மக்களுக்கு ஆரோக்கியமான உணவை பெற்றுக் கொடுப்பதற்கு ஏதுவான நடவடிக்கை களை முன்னெடுக்கப்படுகின்றன என் றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், நாட்டில் 60வீதமானவர் களுக்கு மூன்று வேளை உணவைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், நாட்டில் எரிவாயு எரிபொருள் என்பவற்றின் விலை அதிகரிப்பு காரணமாக சந்தையினுள் மக்களுக்கு உணவை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதன் காரணமாக நாம் கிழங்கு, பலா உள்ளிட்ட கிராமிய பாரம்பரிய உணவுப்பொருட்களை பெற்றுக்கொண்டு நகர் புறங்களில் வாழும் மக்களுக்கு போசணை மிகுந்த உணவை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவுள் ளோம்.

உணவுப்பொருள் தட்டுப்பாட்டின் காரணமாக சிறுவர்கள், கர்ப்பவதி தாய்மார்கள் மற்றும் முதியவர்களே பெரும் பாதிப்புகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ள னர். ஒரு வாரமாக முட்டையை காணாத சிறுவர்கள் நாட்டில் உள்ளனர். இது பெரும் சிக்கல் நிலையாகும். ஆகவே, நாம் கிராமங்களில் உள்ள மரக் கறி வகைகள் கிழங்கு வகைகள் என்ப வற்றை கொழும்பு உள்ளிட்ட நாட்டின் நகர் புறங்களில் வாழும் மக்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்க வுள்ளோம். இதற்கான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அரச நிறுவன ஊழியர் ஒருவரின் உணவுப்பொதியில் உள்ள கறி வகை களை எடுத்துக்கொண்டால் அதனுள் முட்டையோ, கடலுணவோ , இறைச்சி வகையோ உள்ளடங்கவில்லை. அத்த கைய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள் ளோம். ஆகவே, நாட்டுப் பிரஜைகளுக்கு ஆரோக்கியமான உணவை வழங்கும் திட்டமொன்றை முன்னெடுக்க எதிர் பார்த்துள்ளோம் - என்றார். (ஐ)

# நிறைவேறியது மின் திருத்த சட்டம்!

கொழும்பு, ஜூன் 10

மின்சார திருத்த சட்டமூலத்தின் மூன்றாம் வாசிப்பு 70 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த சட்டமூலத்துக்கு ஆதரவாக 116 வாக்குகளும் எதிராக 46 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் கஞ்சன விஜேசேகரவினால் இந்த சட்டமூலம் நேற்று பாராளுமன்றில் முன் வைக்கப்பட்டது. இதேவேளை, மின்சார திருத்த சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு 84 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நீதிமன்றத்தில் சரணடைந்தார் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன்!

கொழும்பு, ஜூன் 10

பாராளுமன்ற உறுப்பி னர் ஜோன்ஸ்டன் பெர் னாண்டோ கொழும்பு கோட்டை நீதிவான் நீதி மன்றில் சரணடைந்தார்.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர் னாண்டோவை நேற் றிரவு 8 மணிக்கு முன்னர் கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலை யிலேயே அவர் தற்போது கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் சரண டைந்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட அரசாங்கத்தை பதவி விலக வலியுறுத்தி கொழும்பில் முன்னெடுக் கப்பட்ட கோட்டா கோ கம, மைனா கோ கம போராட்டங்களின் மீது தாக் குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடை யவர் என்ற குற்றச்சாட்டில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைது செய்ய குற் றப்புலனாய்வு பிரிவினர் முயற்சி எடுத் தனர். இந்த நிலையில் இதனை தடுக்கு மாறு கோரி, எழுத்தாணை ( ரிட்) மனுவை நேற்று முன்தினம் இரவு ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தாக்கல் செய்திருந்தார்.



இந்நிலையில், அவரை கைதுசெய்வ தற்காக நேற்றுமுன்தினம் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட போதிலும் அவர் கைது செய்யப்படாத நிலையில் நேற்றுக் காலை மேன்முறைபீட்டு நீதிமன்றம் நேற்றிரவு 8 மணிக்கு முன்னர் கோட்டை நீதிவான் நீதிமன்றில் முற்படுமாறு ஜோன்ஸ்டனுக்கு உத்தரவிட்டது.

இதையடுத்தே அவர் நேற்று பிற்பகல் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன் றில் சரணடைந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# கூட்டமைப்பு வெளிநடப்பு!

கொழும்பு, ஜூன் 10

மின்சார திருத்த சட்ட மூலம் நேற்று வாக்கெடுப் புக்கு விடப்பட்டபோது இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்ளாமல் வெளியேறியது.

எனினும், மின்சாரம் (திருத்தம்) சட்டமூலம் 70 வாக்குகளும், இரண்டாம் வாசிப்பு 84 வாக்குகளாலும் நிறைவேற் றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

தமிழ்நாடு அரசின் நிவாரண உதவி;

# இரண்டாம் கட்டப் பொருட்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன

*யாழ்ப்பாணம், ஜூன் 10*

தமிழ்நாடு அரசின் இலங்கை மக்களுக்கான இரண்டாம் கட்ட உணவுப்பொருட்களை கொண்ட ரயில் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

நேற்று காலை யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் கிடைக்கப்பெற்ற இந்த உதவிப் பொருட்கள் 11 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு பகிந்தளிப்பதற்காக பிரதேச செயலாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

தமிழ்நாடு அரசினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகள் முதல்கட்டமாக மே 30ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரப்பட்டன. (அ-03)

# 21ஆம் திருத்தம் ஜுலைக்குள் நடைமுறைப்படுத்தவேண்டும்

## சம்பிக்க ரணவக்க வலியுறுத்து

**கொழும்பு, ஜூன் 10**

**பொருளாதார ரீதியில் தான் முன்வைக்கும் வேலைத்திட்டத்தில் அரசாங்கம் ஆர்வமாக இருந்தால், அதில் இணைந்து செயற்பட முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

கட்சியில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படவுள்ளதாக அவர் அறிவித்திருந்த நிலையில், நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

21ஆவது திருத்தம் போன்ற விடயங்கள் எதிர்வரும் ஜுலை மாதத்திற்குள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என அவர் வலியுறுத்தினார்.



தற்போது நாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டம் ஓயவில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும் என தெரிவித்த அவர், இந்தப் போராட்டம் மீண்டும் மிகவும் ஆபத்தான முறையில் கொண்டுவரப்படலாம் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

சிலர் அதற்கான நடவடிக்கையை முன்னெடுக்கலாம் என்றும் எனவே அதற்கு நாம் தயாராக வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தில் உள்ள சில விடயங்களில் தமக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும் தாம் அதில் தலையிடப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# புதுப்பிக்கத்தக்க மின்சக்திக்கான கட்டமைப்பை பலமாக்கவேண்டும்

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை

*கொழும்பு, ஜூன் 10*

புதுப்பிக்கத்தக்க மின்சக்திக்கான கட்டமைப்பை நாட்டின் இன்னமும் பலப்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர், இந்த நாட்டில் புதுப்பிக்கத்தக்க மின்சக்திக்கான கட்டமைப்பை இன்னமும் பலப்படுத்த வேண்டும்.

இதனை அதிகரிக்க வேண்டும். இதற்கு எதிர்க்கட்சி எனும் வகையில் நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயராகவே உள்ளோம்.

நாட்டின் எதிர்க்காலமானது சூரிய சக்தி, காற்றாலை மற்றும் நீர் மின் உற்பத்தியை இலக்காக் கொண்டே பயணிக்க வேண்டும்.

டீசல் மற்றும் நிலக்கரியூடான மின்சார உற்பத்திக்கு அதிக செலவேற்படுவதை நாமும் ஏற்றுக் கொள்கிறோம்.

ஆனால், அரசாங்கங்கமானது டீசல் மாபியா ஒன்று இடம்பெறுவதாகக் குறிப்பிட்டு இதனை முற்றாக இல்லாதொழிக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதன் ஊடாக போட்டித்தன்மை இல்லாது போனால், ஊழல்வாதிகளுக்கும் மோசடியாளர்களுக்கும் அதிக நன்மை ஏற்படும்.

எனவே, இதற்கு நாம் ஒத்துழைப்பினை வழங்க முடியாது. நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கொடுக்கல்- வாங்கல்களுக்கு நாம் என்றும் இடமளிக்கப்போவதில்லை-என்றார். (அ)

# மன்னார் அச்சங்குளத்தில் நேற்று அனர்த்த ஒத்திகை!

*மன்னார், ஜூன் 10*

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அச்சங்குளம் கிராமத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் சுனாமி ஒத்திகை நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் அச்சங்குளம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள அச்சங்குளம், அருகங்குன்று போன்ற கடற்கரையோர பிரதேசங்களில் எதிர் காலத்தில் சுனாமி தொடர்பான அனர்த்தங்கள் ஏற்படுகின்றபோது குறித்த அனர்த்தங்களில் இருந்து மக்களை விழிப்பூட்டுவதற்கும் அது சம்பந்தமான அறிவைப் பெற்றுக் கொள்வதற்குமான ஒத்திகை நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலகம், மன்னார் பிரதேச செயலகங்கள்,இராணுவம்,பொலிஸ்,வேள்ட் விஷன்,அனர்த்த முகாமைத்துவ பிரிவு சென் ஜோன் அம்புலன்ஸ்,செஞ்சிலுவை சங்கங்கள் உட்பட பல நிறுவனங்கள் இணைந்து குறித்த ஒத்திகை நடவடிக்கையை மேற்கொண்டன. (அ)




# காலதாமதமாக வரும் மாணவருக்கு சலுகை

*கொழும்பு, ஜூன் 10*

போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளமையால் பாடசாலைக்கு தாமதமாக வரும் மாணவர்கள் தொடர்பில் சலுகைகளை வழங்குமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அது தொடர்பில் இரண்டொரு தினங்களில் கல்வியமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிடும் என்றும் அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் நெருக்கடியான சூழ்நிலையில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தாமதமாகி பாடசாலைகளுக்கு சமூகமளிக்கும்போதும் மாணவர்களின் சீருடை பிரச்னை மற்றும் காலணிகளை அணியாதபோதும் எடுக்கப்படும் நடவடிக்கைகளை தவிர்த்துக் கொள்ளுமாறும் தெரிவித்துள்ள கல்வி அமைச்சர், அது தொடர்பான சுற்றறிக்கை ஓரிரு தினங்களில் வெளியிடப்படும் எனவும் கூறினார். (அ)




## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 - 11 - 1946 | 06 - 06 - 2022 |

### ஐயாத்துரை நாகரத்தினம் தெய்வேந்திரன் (தேவா)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடா Mississauga வை வதிவிடமாகவும் கொண்ட ஐயாத்துரை நாகரத்தினம் தெய்வேந்திரன் அவர்கள் 06.06.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் பராசக்தி தம்பதிகளின் ஏக புதல்வரும், காலஞ்சென்றவர்களான நந்தாவில் கொக்குவிலைச் சேர்ந்த இராசரத்தினம் செல்லம்மா தம்பதிகளின் அருமை மருமகனும், ஜீவா அவர்களின் ஆருயிர்க் கணவரும்,தாரணி, ஜனகன், ஜனந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிஷான் அவர்களின் அருமை மாமனாரும்,கவின், தேவன், ரைலர் ஆகியோரின் ஆசைத் தாத்தாவும், காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தர், பசுபதி ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், நவரத்தினம், கனகரத்தினம், ஸ்ரீபதி மற்றும் அரசரத்தினம்(கனடா), கமலா (லண்டன்), லீலா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

பார்வைக்கு:
Saturday, 11 Jun 2022 5:00 PM - 9:00 PM
St John’s Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

கிரியை:
Sunday, 12 Jun 2022 9:00 AM - 12:00 PM
St John’s Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**தாரணி - மகள்.**

தொடர்புகளுக்கு:
**ஜீவா - மனைவி** Mobile : +19058284028
**ஜனகன் - மகன்** Mobile : +16472975509
**தாரணி - மகள்** Mobile : +16479629941
**ஜனந்தன் - மகன்** Mobile : +16472716345

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-இன்று நேற்று நாளை, கதகளி திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**
7.00 மணி : ரசிகன் எனகின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - வெகுஜனப்போராட்டங்கள்



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் நிலி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு